காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 21 சனிக்கிழமை 05.01.2019 கதிர் 56

**இது ரகசியம் அல்ல!**

நடைபெறும் ஆளுநர் மாற்றங்கள் தமிழர் தரப்புக்கு – இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால் சிறுபான்மை மக்களுக்கு – சில செய்திகளை உணர்த்தத் தவறவில்லை என்றே குறிப்பிடலாம்.

இந்த நியமனங்ள் மூலம் தெற்கு – குறிப்பாக ஜனாதிபதி தரப்பு –தமிழ் மக்களுக்குச்

பக்கம் 02

# ஆயுதப் போரை மட்டுமன்றி புலிகள் ஜனநாயகத்தையும் விரும்பினார்கள்

## அடித்துக் கூறுகிறார் வடக்கு அவைத் தலைவர் சீ.வி.கே.



யாழ்ப்பாணம், ஜனவரி 05

தமிழீழ விடுதலைப் புலிகள் ஜனநாயகத்தை விரும்பவில்லை என கூறவது தவறான கருத்தாகும். 1991ஆம் ஆண்டே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் எம்மோடு பேசுகையில், 'தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்க முடியாது. ஜனநாயக ரீதியான கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவேண்டும்' என விரும்பினார். அதற்கு நான் மட்டுமல்ல பலர் வாழும் சாட்சிகளாக உள்ளனர்.

இவ்வாறு அடித்துக் கூறினார் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம்.

புலிகள் ஜனநாயகத்தை விரும்பினார்கள். ஆயுதப் போராட்டத்தை மட்டுமே அவர்கள் நம்பியிருக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

பக்கம் 11

## நீதிமன்றக் கட்டடப் பணியை நேற்று முல்லையில் பார்வையிட்டார் தலதா



முல்லைத்தீவு, ஜன. 04

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட நீதி மற்றும் சிறைச்

பக்கம் 11

## எதிர்க்கட்சித் தலைவருக்கான சமரில் மஹிந்தவுக்கு வெற்றி!

### வெளியேறுகிறார் சம்பந்தன்

கொழும்பு, ஜன. 05

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக

பக்கம் 11

## எம்.பியாகிறார் சாந்த பண்டார 8 ஆம் திகதி சத்தியப்பிரமாணம்

கொழும்பு, ஜன. 05

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் இளைஞர் அணி தலைவரான சாந்த பண்டார

பக்கம் 11

## ஐரோப்பிய எம்.பிக்கள் இருவர் நேற்று வவுனியாவுக்கு பயணம்

### மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய்ந்தனர்



வவுனியா, ஜன. 05

வவுனியாவுக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட ஐரோப்பிய நாடாளு

பக்கம் 11

## நாமல் குமாரவுக்கு நீதிமன்று வாய்ப்பூட்டு

### ஊடகங்களுக்கு கருத்து வெளியிடத் தடை

கொழும்பு, ஜன. 05

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கொலைச் சதித்திட்டம் சம்பந்தமாக

பக்கம் 11

## கிழக்கு ஆளுநராக ஹிஸ்புல்லாஹ் மேல்மாகாணத்துக்கு அஸாத் சாலி

### 5 மாகாணங்களுக்கு நேற்று ஆளுநர்கள் நியமனம்



கொழும்பு, ஜன. 05

கிழக்கு உட்பட ஐந்து மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

பக்கம் 11

## மக்கள் காணியில் விவசாயப் பண்ணை உடன் விடுவிக்கவேண்டும் இராணுவம்!

### செட்டிகுளத்தில் நேற்றுப் பெரும் போராட்டம்




வவுனியா, ஜன. 05

வவுனியா,செட்டிகுளம், இராமியன்குளத்தில் மக்களின் காணிகளைக் கையகப்படுத்திஇராணுவம் மேற்கொண்டு வரும் விவசாயப்பண்ணையை உடன் விடுவிக்கக் கோரி

பக்கம் 11

## இடரால் பாதிப்புற்ற மக்களுக்கு நீதியமைச்சர் உதவி வழங்கினார்



முல்லைத்தீவு, ஜன. 05

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கினார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட நீதி அமைச்சர் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில்

பக்கம் 11

## அரசியல்வாதிகளைப் போன்று ராணுவத் தளபதி பேசக்கூடாது

### வடக்கு முன்னாள் முதல்வர் விக்கி காட்டம்

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஜன. 05

அரசியல்வாதிகள் போன்று பேசுவதை இராணுவத் தளபதி தவிர்த்துக் கொள்ளவேண்டுமென வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இருந்து

பக்கம் 11

## வடக்கு இ.போ.ச. பணிப்புறக்கணிப்பு அரச பஸ் சேவைகள் நேற்று முடக்கம்

### பாடசாலை மாணவர்கள், அலுவலர்கள் பெரும் சிரமம்



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஜன. 05

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடக்கிலுள்ள 7 சாலைகளின் ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால்

பக்கம் 11

## முல்லையில் வெள்ளத்தால் 86 வீடுகள் முற்றாக சேதம்

### 24493.5 ஏக்கர் பயிர்ச்செய்கை அழிவு

முல்லைத்தீவு, ஜன. 05

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் 10,118 குடும்பங்களை சேர்ந்த 32, 551 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டனர். 86 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்தன. 2297 வீடுகள் பகுதி அளவில் சேதமாகின. 24493.5 ஏக்கர் பயிர்ச்செய்கை அழிவடைந்தது. 11,237 கால்நடைகள் இறந்துள்ளன.



கடற்தொழிலில் ஈடுபடும் 22 படகுகள் தொலைந்துள்ளன. 224 வலைகள்

பக்கம் 11

# வாழ்வாதாரத்தைப் பாதுகாக்காமல் வாய்ச்சவடால் விடுவது பயனற்றது

## டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவிப்பு

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் தமிழ் இளைஞர்கள் பணிபுரிவது அவர்களது வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கு உதவும். அதை உணர்ச்சிப் பேச்சுக்கள் பேசி எமது இளைஞர் யுவதிகளை வறுமையான வாழ்வுக்குள் தள்ளிவிட வேண்டாம். அழிவு யுத்தத்திற்கு முகங்கொடுத்த பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள எமது மக்களுக்கு எவ்வகையிலும் உதவாதவர்கள் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் தமிழ் இளைஞர், யுவதிகள் பணிபுரிவதைத் தடுக்க எத்தனிப்பது அர்த்தமற்ற செயற்பாடாகும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நேற்றுச் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கிளிநொச்சி முரசுமோட்டையிலுள்ள கோரக்கன் குடியிருப்பு கிராமிய உழைப்பாளர் சங்க உறுப்பினர்களை சந்தித்து அவர்களது தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தபின் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போராட்டம்ஊடாகத்தைப்பாதுகாத்துக்கொண்டு இலக்கை நோக்கி முன்னேறவேண்டியதொன்றாகும். நாம் இயக்கங்களின் வேறு பாடுகளைப் பார்ப்பதுகிடையாது. எமக்கும் இதர இயக்கங்களுக்கும் இடையிலானவேறுபாடானது போராட்ட வடிவில்தான் இருந்திருக் கின்றது.

மக்களின் நலன்களை மட்டுமே இலக்காகக் கொண்டு உழைத்து வருகின்றோம். கடந்தகாலத்தில் நாம் முன்னெடுத்துச் சென்ற வழி முறைகள்தான் இன்று நிதர்சனமா கியுள்ளது. அந்தவகையில் யுத்தம் நிறைவடைந்த பின் கிளிநொச்சிப் பிரதேசத்தின் அபிவிருத்தியை நாம் எவ்வாறு தூக்கி நிறுத்தியிருந்தோமோ அதுபோல் யுத்தப் பாதிப்புக்களுக்கு முகங்கொடுத்த மக்களது பிரச்சினைகள் அனைத்தும் தீர்த்து அவர்களை எதிர்காலம் மீதான நம்பிக்கையுடன் வாழவைக்க வேண்டும் என்பதற்காகவே தொடர்ந்தும் பாடுபட்டு வருகின்றேன்.

எமது இளைஞர் யுவதிகள் சுமார் 3 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் வேலைவாய்ப்புக் களைப் பெற்று தமது குடும்ப பொருளாதாரத் தேவையை ஈடுசெய்து வருகின்றார்கள். இன்றும் இளைஞர் யுவதிகள், அங்கவீனமடைந்தவர்கள், கைம் பெண்களென பல ஆயிரம் பேர் அவர்களுக்குரிய வேலைவாய்ப்புக்கள் கிடைக்காமலும் சுயபொருளாதார உதவிகள் கிடைக்காமலும் துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

அவர்களின் வறுமையைப் போக்க வேலைவாய்ப்புக்களை உருவாக்காமலும் சுயதொழில் உதவிகளை பெற்றுக்கொடுக்காமலும் வெறுமனவே சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் வேலை செய்பவர்களைத் தீண்டத்தகாதவர்கள் போல் சித்தரிப்பதும் அவர்களை விமர்ச்சிப்பதுமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு செயற்படுவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவித நன்மைகளை பெற்றுத்தரப் போவதில்லை–என்றார். (ஐ)

# பௌதீகவியல் கரு காலமானார்



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த பௌதீகவியல் ஆசிரியரான அ.கருணாகரன் (வயது 94) நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் காலமானார்.

தமது கடைசி நாள் – இறுதி மூச்சு வரை – பௌதீகக் கல்விப் போதனையில் துடிப்புடன் ஈடுபட்டவர்.

சென் பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான அவர் கல்லூரி நாள்களில் கிரிக்கெட்டிலும் உதைபந்தாட்டத்திலும் மெச்சப்பட்ட ஒரு வீரராகத் திகழ்ந்தார்.

1960 முதல் 1983 வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியோடு தன்னைப் பிணைத்துக் கொண்ட அவர், கல்லூரியின் பிரதி அதிபராகவும் சிறப்பான பணியாற்றி கல்லூரிச் சமூகத்தினால் என்றும் அன்புரிமையோடு பெரிதும் மதிக்கப்படும் நல்லாசானாக உயர்ந்தார்.

அவர் 'மாணவர் பௌதீகம்' என்ற பெயரில் தொடராக வெளியிட்ட பாடபோதனைப் புத்தகங்கள் கல்விச் சமூகத்தினால் பெரிதும் விதந்துரைக்கப்பட்டு வரவேற்கப்பட்டன.

சாதாரண தர, உயர்தர மாணவர்களுக்கான பௌதீகவியல் பாடப் புத்தகம் என்றால் அது 'கருணாகரனின் புத்தகம்' என்று கருதும் அளவுக்கு இத்துறையில் அவர் புகழ் பரவியிருந்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அவரது வழிநடத்தலில் உதைபந்தாட்டத் துறை சாதனைகள் பல புரிந்தது. அவர் பொறுப்பாசிரியராக இருந்த பல அணிகள் யாழ் மாவட்ட சாம்பியனாகின. அவரின் வழிகாட்டலில் கல்லூரி பெருமை கொள்ளும் வகையில் பல வீரர்கள் மாவட்ட ரீதியிலும், தேசிய ரீதியிலும் அங்கீகாரம் பெறும் தரத்துக்கு உயர்ந்தனர்.

94 வயதிலும் கடைசி நாள் வரை விளையாட்டுவீரன் போலத் துடிப்புடன் நடமாடியபடி கல்விப்போதனை தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கருணாகரன் ஆசிரியரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம், நல்லூர், வைமன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

## முல்லையில் .....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

மையாக இறந்துள்ளன. இதனை நம்பியுள்ள விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளார்கள். கால்நடைகளின் கொட்டில்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மேச்சல் தரவைகளும் சேதமடைந்துள்ளன.

மீன்பிடித்துறையில் கடற்தொழிலில் ஈடுபடுகின்ற 15 படகுகள் தொலைந்துள்ளன. 187 வலைகள் காணாமல் போயுள்ளன. நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுகின்றவர்களின் 7 படகுகளும், 37 வலைகளும் காணாமல் போயுள்ளன.

நன்னீர் மீன்பிடிக்காக மீன் குஞ்சுகள் குளங்களில் விடப்பட்டன. அவைகளும் வெள்ள நீரினால் அடித்து செல்லப்பட்டுள்ளன. மீண்டும் குளங்களில் மீன் குஞ்சுகள் விடவேண்டிய தேவை உள்ளது.

86 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. 2297 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதிகளும் கட்டுமானங்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கான வீதிகள் 84.2 கிலோமீற்றர் வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. 29 கால்வாய்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 03 விவசாய வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளில் மாந்தை கிழக்கில் 39 வீதிகளான 36.5 கிலோமீற்றர் வீதிகளும், துணுக்காய் பிரதேச சபைக்கு உட்பட்ட 30.9 கிலோமீற்றர் வீதிகளும், புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட 119.8 கிலோமீற்றர் வீதிகளும், பாலங்கள், கல்வெட்டு போன்ற 60 இற்கு மேற்பட்டவை பாதிக்கப்பட்டுள்ளன. கரைதுறைப்பற்று பிரதேசத்திற்கு உட்பட்ட 82 வீதிகள் 93.25 கிலோமீற்றர் வரை பாதிக்கப்பட்டுள்ளன.

நீர்ப்பாசனத்திணைக்களத்துக்கு உரிய 20 குளங்களில் குளங்கள் மட்டுமல்ல குளங்களுக்கு கீழான கட்டுமான பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்கு கீழான பத்துசிறுகுளங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளில் சிறுசிறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன –என்றார்.

# வடக்கு ஆளுநராக மார்ஷல் பெரேரா?

யாழ்ப்பாணம், ஜன. 05

5 மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நியமித்தார். இதன்போது வடக்குக்கான புதிய ஆளுநர் நியமனம் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவித்தலுக்கமைய அனைத்து மாகாண ஆளுநர்களும் தங்களது பதவி விலகல் கடிதத்தைக் கையளித்துள்ள நிலையில் நேற்று 5 மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர்.

ஆயினும் வடக்குக்கான ஆளுநர் நியமனம் நேற்று வழங்கப்படவில்லை. தென் மாகாண ஆளுநராகக் கடமையாற்றிய மார்ஷல் பெரேரா, வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மார்ஷல் பெரேரா. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவின் தந்தையாவார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொல்ல விழையும் செய்தி என்ன என்பதை தமிழர் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும்.

மேல் மாகாண ஆளுநர் நியமனங்களில் கடந்த முப்பது ஆண்டுகளாக ஒரு பாரம்பரியம் இதுவரை பதவியில் இருந்த ஜனாதிபதிகளினால் பின்பற்றப்பட்டு வந்தது.

மூவின மக்களும் வசிக்கும் தலைநகரையும் உள்ளடக்கிய மேல் மாகாணத்தின் ஆளுநராக சிறுபான்மையினர் ஒருவரே – தமிழர் அல்லது முஸ்லிம் ஒருவரே – நியமிக்கப்படுகின்றமை வழமை.

நீதியரசர் சு.சர்வானந்தா, டி.எம்.சுவாமிநாதன், கே.விக்னராஜா, பத்மநாதன் இராமநாதன், அலவி மௌலானா, கே.ஸி. லோகேஸ்வரன் என்று இருந்த இந்த வரிசையை முறியடித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

2018 ஏப்ரல் 18 ஆம் திகதி சிங்களவரான ஹேமகுமார நாணயக்காரவை ஆளுநராக நியமித்து அந்தப் பாரம்பரியத்தை மாற்றியமைத்தார் மைத்திரிபால சிறிசேன.

இப்போது அந்தப் பதவிக்கு முஸ்லிமான ஆஸாத் ஸாலியை நியமித்தமை சிறுபான்மையினரைப் பொறுத்தவரை வரவேற்கத்தக்க அம்சமே.

ஆனாலும் நேற்று வரை தேர்தல் அரசியலில் ஈடுபட்டிருந்தவரை உடனடியாக ஆளுநர் பதவிக்கு நியமித்தமை சிறிது இடறலாகத்தான் உள்ளது.

இதற்கு மாறாக, கிழக்கு மாகாண ஆளுநர் நியமனம் தமிழ்த் தலைமைக்கு ஒரு செய்தியாக வந்து அமைந்துள்ளது. கிழக்கில் தமிழர் – முஸ்லிம் உறவுச் சீர்கேடே தமிழ்க் கூட்டமைப்புக்கு நிகராகப் பிள்ளையான் அணி, கருணா அணி எல்லாம் தேர்தல் அரசியலில் உருவெடுத்தற்குக் காரணம்.

தமிழர் – முஸ்லிம் நல்லுறவை வலியுறுத்தும் தமிழ்க் கூட்டமைப்பைப் புறக்கணித்து, அதற்கு எதிர்த்திசையில் நகரும் போக்கையே தமது சித்தாந்தமாகக் கொண்டிருக்கும் கட்சிகள் பக்கம் கிழக்குத் தமிழர்கள் கணிசமாக அணி திரள்கின்றனர் என்றால், அதன் பின்புலம் புரியத்தக்கதே. அதற்கு மேலும் ஊக்கமளிக்கும் வித்தத்திலான நியமனமே கிழக்கு ஆளுநர் பதவியை ஹிஸ்புல்லாவுக்கு அளித்த விவகாரம்.

நேற்று வரை நாடாளுமன்ற அரசியலில் – தேர்தல் அரசியலில் – இருந்தவரை இன்று ஆளுநராக நியமித்திருக்கின்றமை ஆளுநர் நியமனத்தில் அரசியல் நடத்துவதற்குமைத்திரி தீர்மானித்துவிட்டார் என்பதையே காட்டுகின்றது.

அதுவும் இவ்வருட முற்பகுதியில் பிரதி அமைச்சராக இருந்த சமயத்தில், வேறு சிலரோடு சேர்ந்து 9 கோடி 40 லட்சம் ரூபா மோசடி செய்த வழக்கு ஒன்றில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, வாழைச்சேனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, அந்தக் குற்ற வழக்குத் தொடர்பாகப் பிணையில் விடப்பட்டிருப்பவருக்கு அந்தப் பிரதேச ஆளுநர் பதவி வழங்கியமை ஒரு குசும்புத்தனமின்றி வேறில்லை.

கிழக்கில் தமிழர் – முஸ்லிம் நல்லுறவுக்கு – அதன் மேம்பாட்டுக்கு – பொருந்திவராத ஒருவரை, அதுவும் நேற்று வரை அந்த இன முரண்பாட்டை வைத்தே அரசியல் செய்து வந்த ஒருவரை, கிழக்கு ஆளுநராக நியமித்தமை மூலம், சூழலைக் கெடுத்திருக்கின்றார் மைத்திரி.

'அவலை நினைத்து உரலை இடித்த கதை' என்பார்கள். அது போன்று ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சி விவகாரத்தை ஒட்டித் தன்னுடன் ஒத்துழைக்க மறுத்த தமிழ்க் கூட்டமைப்பை ஒரு தட்டுத் தட்டுகிறேன் என்று நினைத்துக் கொண்டு, கிழக்குத் தமிழருக்கே ஆப்பு அடிக்கும் கைங்கரியத்தை முன்னெடுத்திருக்கின்றார் மைத்திரிபால என்று தோன்றுகின்றது.

வடக்குக்கு இன்னும் புதிய ஆளுநர் நியமிக்கப்படவில்லை. மைத்திரிபக்கம் நிற்கும் முன்னாள் அமைச்சர் டிலான் பெரேராவின் தந்தையாரான மார்ஷல் பெரேராவின் பெயரும் இந்நியமனத்தில் அடிபடுகின்றது. 85 வயதைத் தாண்டியவர் அவர். கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனோடு ஒரே சமயத்தில் சக தோழராக சட்டக் கல்லூரியில் படித்தவர் மார்ஷல் பெரேரா என்று தகவல்.

அவர் சம்பந்தனின் சட்டக் கல்லூரிக் காலத் தோழர் என்ற தகவல் வெளியே கசிந்தால் அது, அவர் நியமனத்துக்கு எதிரான தகுதியீனமாகி விடுமோ என்னவோ...!

- மின்னல் -

# பிரபாகரனின் நண்பர் காலமானார்



கொழும்பு, ஜன. 05

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் நெருங்கிய நண்பரும் அந்த அமைப்பின் சர்வதேசகப்பல் போக்குவரத்து ஸ்தாபகருமான பிறைசூடி காலமானார்.

யாழ்ப்பாணம், வடமராட்சியை பிறப்பிடமாகக் கொண்ட இவர், உடல் நலக் குறைவின் காரணமாக நேற்று சென்னையில் காலமானார் என அவரது உறவினர்கள் அறிவித்துள்ளனர். இவர் அரசதுறையில் சேவையாற்றிய வேளையில் இலங்கையில் தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, தமிழ் அரச ஊழியர்கள் அனைவரும் சிங்களத்தைக் கற்கவேண்டியது அவசியமென வலியுறுத்தப்பட்ட நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து தனது பதவியைத் துறந்தார்.

பிரபாகரனுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தவர்களில் ஒருவரான இவர், இறுதிகட்டப் போரின்போது இந்தியாவில் தஞ்சமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நீர்த்தேக்கத்தில் இருந்து பெண்ணின் சடலம் மீட்பு

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து, உயிரிழந்த நிலையில் பெண்ணின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

இந்த நீர்த்தேக்கத்தில் சடலமொன்று மிதந்து வருவதைக் கண்ட அப்பகுதி மக்கள் தலவாக்கலை பொலிஸ் நிலையத்துக்கு வழங்கிய தகவலுக்கமைய சடலம் மீட்கப்பட்டுள்ளது. சில தினங்களாக இந்தச் சடலம் நீர்த்தேக்கத்தில் இருந்தமையால் அதனை அடையாளம் காணமுடியவில்லை எனப் பொலிஸார் கூறினர். (ஐ)

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகை குறித்து மங்கள ஐரோப்பாவுடன் பேச்சு

கொழும்பு, ஜன. 05

ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்படும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை தொடர்பில் ஐரோப்பிய நாடாளுமன்றின் இலங்கை நட்புக் குழு உறுப்பினர்களுடன் நிதி அமைச்சர் மங்கள சமரவீர சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதி மேற்கொண்ட முடிவை அடுத்து, மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை தனது வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்கினால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை நிறுத்துவது குறித்து சிந்திக்கவேண்டி வரும் என ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

தற்போது இலங்கையில் மீண்டும் ஸ்திர நிலை உருவாகியுள்ள நிலையில் இலங்கை வந்துள்ள ஐரோப்பிய நாடாளுமன்றின் இலங்கை நட்புக் குழுவின் உறுப்பினர் ஜெப்ரி வான் ஓர்டன் மற்றும் வில்லியம் டார்ட்மவுத்தை நேற்றுக் கொழும்பில் அமைச்சர் மங்கள சமரவீர சந்தித்துக் கலந்துரையாடினார்.



இந்தச் சந்திப்பின்போது வர்த்தக ரீதியான பரஸ்பர ஒத்துழைப்பு, சுற்றுலாத் துறை மற்றும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக மங்கள சமரவீர தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரமவும் கலந்துகொண்டார்.

புதிய அரசு ஆட்சிக்கு வந்ததை அடுத்து இலங்கையில், ஊழலை ஒழிப்பதற்கும், மனித உரிமைகளைப் பேணுவதற்கும், நீதியின் ஆதிபத்தியத்தை உறுதி செய்வதற்கும் மேலும் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிக் கவனம் செலுத்துவதற்கும் இலங்கை அரசு விசேட கவனம் செலுத்தியமை தொடர்பில் கருத்திற்கொண்டு, மீண்டும் அந்த வரி விலக்களிப்பை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தோட்டத் தொழிலாளர்கள் சம்பளம்; பிரதமர் ரணில் தலையிடவேண்டும்

## அருட்தந்தை சக்திவேல் கோரிக்கை

கொழும்பு, ஜன. 05

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச்சம்பளம் 1000 ரூபா நிச்சயமாக வழங்கப்படவேண்டும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் நேரடியாகத் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரி அருட்தந்தை சக்திவேல் தலைமையிலான சிவில் அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று வெள்ளிக்கிழமை பிரதமர் அலுவலகத்தில் மனு ஒன்றைக் கையளித்தது.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அருட்தந்தை சக்திவேல்.

நாட்டில் அரசுகள் மாற்றமடைந்து வந்தாலும் அன்று தொடக்கம் இன்று வரை பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்படுகின்றது. கடந்த 2016 ஆம் ஆண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 1000 ரூபாவாக அதிகரிக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

அத்தோடு எதிர்க்கட்சித் தலைவரும் இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி கம்பனிகளுடன் பேச்சு நடத்தி இந்தப் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுத் தருவதாக கூறினார் என நாடாளுமன்ற உறுப்பினர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்திருந்தார்.



எவ்வாறிருப்பினும் தற்போது ஆளுங்கட்சி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வேதன அதிகரிப்பு பெற்றுக் கொடுக்கக் கூடிய அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றது.

எனவே கம்பனிகாரர்களின் நிபந்தனைகளுக்குக் கீழ்படியாமலும், தொழிற்சங்கங்களின் பொய்ப் பிரசாரங்களுக்குச் செவி சாய்க்காமலும் தொழிலாளர்களின் நன்மையை மாத்திரம் பிரதமர் கருத்திற்கொண்டு செயற்படவேண்டும் என அந்த மகஜரில் குறிப்பிட்டுள்ளோம்.

இந்த விடயம் தொடர்பில் இன்றே தொழிற் அமைச்சருக்கு அறிவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பார் என எதிர்பார்க்கின்றோம்.

அத்தோடு கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முன்னர் அதன் உள்ளடக்கத்தைப் பொதுமக்களுக்கு அவர்கள் புரிந்துகொள்ளக் கூடிய மொழியில் வெளிப்படுத்தி தெளிவுபடுத்தவேண்டும் எனவும் அந்த மகஜரில் கூறியுள்ளோம்.

அது தொடர்பாக தொழிலாளர்களின் நிலைப்பாட்டைக் கேட்டறிந்த பின்னரே கையெழுத்திடப்பட வேண்டும்-என்றார். (ஐ)



# மைத்திரிக்குச் சீனா புத்தாண்டு வாழ்த்து

கொழும்பு, ஜன. 05

சீனா இலங்கையுடன் பாரம்பரிய ரீதியில் முக்கியத்துவமுடைய நட்புறவைப் பேணிவருகின்றது. இந்தப் புது வருடத்திலும் சீனா இலங்கை அரசுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்குத் தயாராக உள்ளது. பல்வேறு துறைகளிலும் இரு நாடுகளும் பேணிவரும் இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் நல்லுறவு என்பவற்றை மேலும் மேம்பட்ட நிலையொன்றுக்கு உயர்த்தவேண்டும் எனச் சீனா தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சீன ஜனாதிபதி சி ஜின்பிங்கின் புத்தாண்டு வாழ்த்து மடலை இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் ஸுயுவான் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார்.

அதனைக் கையளித்த சீனத் தூதுவர்-

புது வருடத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர பரிமாற்றங்கள், தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இலங்கை எதிர்பார்த்துள்ளதுடன், பட்டுப்பாதைத் திட்டத்தில் விருப்புடன் பங்கெடுக்கவுள்ளதாகவும், இரு நாடுகள் மற்றும் நாட்டு மக்களுக்கும் நன்மையளிக்கும் வகையிலான துறைகளில் புதிய திட்டங்களை ஒன்றிணைந்து செயற்படுத்தத் தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டார். (ஐ)

# பொலிஸ் உருவப் பொம்மைக்கு லஞ்சம் கொடுத்து சிக்கினர் மூவர்


வவுனியா, ஜன. 05

வவுனியா-யாழ்ப்பாணம் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரின் மாதிரி உருவப் பொம்மைக்கு இலஞ்சம் கொடுப்பது போன்று வீடியோ எடுத்து இணையத்தில் பதிவேற்றிய வவுனியா தனியார் நிதி நிறுவன ஊழியர்கள் 3 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாரதிகள் வேகமாக வாகனங்கள் செலுத்துவதைக் கட்டுப்படுத்தும் வகையில் ஏ-9 வீதியில் வாவுனியா பகுதியில் பொலிஸார் வீதிகளில் நிற்பதைப் போன்று உருவப் பொம்மைகள் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் அதனை அவமதிக்கும் வகையில் இளைஞர்கள் மூவர் பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுப்பதைப் போன்று வீடியோக்களை எடுத்து இணையத்தில் பதிவேற்றியுள்ளனர்.

இதனை அடுத்து பொலிஸார் அவர்களைக் கைது செய்துள்ளனர்.



பொலிஸாரை அவமதித்தமை, மக்கள் மத்தியில் பொலிஸார் தொடர்பாகத் தவறான நிலைப்பாடுகளைக் கொண்டு செல்லமுயற்சித்தமை, இலஞ்சம் கொடுப்பதற்கு மக்களைத் தூண்டியமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# ஜனாதிபதிக்குத் தகுந்த பாடம் கற்பித்த தேவநேசன் நேசையா

கொழும்பு, ஜன. 05

ஓய்வுபெற்ற சிவில் சேவை அதிகாரி கலாநிதி தேவநேசன் நேசையா தனக்கு வழங்கப்பட்ட தேசமான்ய விருதை மீண்டும் ஜனாதிபதியிடம் திரும்பக் கையளித்தார்

ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் நடைமுறைகளுக்கும் முரணான வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்பட்டு வருவதாக கவலை தெரிவித்த ஓய்வுபெற்ற சிவில் சேவை அதிகாரியான கலாநிதி தேவநேசன் நேசையா கடந்த வருடம் தனக்கு ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட தேசமான்ய விருதுக்கான பதக்கத்தையும் சான்றிதழையும் திருப்பியனுப்பப் போவதாக முன்னர் அறிவித்திருந்தார்.

நீங்கள் தந்த தேசமான்ய விருதில் பெருமைப்பட இனிமேலும் எனக்கு எதுவுமில்லை என்பதால் நான் இதுவரை மதித்து வைத்திருந்த பதக்கத்தையும் சான்றிதழையும் திருப்பியனுப்புவதைத் தவிர எனக்கு வேறு தெரிவு இருக்கவில்லை எனத் தெரிவித்த அவர், தனக்கு வழங்கப்பட்ட தேசமான்ய விருதை ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாக நேற்றுமுன்தினம் கையளித்தார். (ஐ)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கூட்டமைப்புக்கு திராணி உண்டா?

பிறந்த இந்த வருடத்தைத் தேர்தல் ஆண்டு என்று கூறு கின்றார்கள்.

நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் எல்லாம் இந்த வருடத்தில் நடக்கும் என்று ஆரூடம் கூறுகின்றார்கள். ஆனால் நடத்த வேண்டிய – நடத்தி முடித்திருக்க வேண்டிய – மாகாண சபைத் தேர்தல்கள் எப்போது நடைபெறும் என்று கூறுகின்றார்கள் இல்லை.

சரியோ, பிழையோ ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடத்தில் நடத்தப்பட்டேயாக வேண்டும்.

2015 ஜனவரி 9 ஆம் திகதி மைத்திரிபால சிறிசேன ஜனாதி பதியாகப் பதவியேற்றார். அவரது ஐந்து ஆண்டு பதவிக் காலம் 2020 ஜனவரி 8 ஆம் திகதி முடிவடைகின்றது. அரசமைப்பு ஏற் பாடுகளின்படி ஒரு ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடை வதற்கு ஆகக் குறைந்தது ஒரு மாதத்துக்கு முன்னதாகவோ அல்லது ஆகக் கூடியது இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவோ தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதன்படி பார்த்தால் இந்த ஆண்டு நவம்பர் 8 ஆம் திகதிக்கும் டிசெம்பர் 8 ஆம் திகதிக்கும் இடைப் பட்ட ஒரு திகதியில் இத்தேர்தல் நடத்தப்பட்டேயாக வேண்டும். அப்படியானால் மைத்திரிபால சிறிசேனவின் தற்போதைய பதவிக் காலம் இன்னும் பத்து அல்லது பதினொரு மாதங் கள்தாம். அவராக நினைத்தால் அதற்கு முன்னராகவும் அவர் ஜனாதிபதித் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கலாம்.

நாடாளுமன்றத் தேர்தல் – பொதுத் தேர்தல் – எப்போது என் பதை இப்போது கூறமுடியாது. அதன் பதவிக் காலம் அடுத்த ஆண்டு ஓகஸ்ட் வரை உள்ளது. அடுத்த ஆண்டு பெப்ரவரிக்குப் பின்னர், அப்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதி நாடாளும ன்றத்தைக் கலைத்துத் தேர்தல் நடத்தலாம். அதற்கு இடையில் நாடாளுமன்றம் தானாக மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை யுடன் ஒரு தீர்மானத்தை எடுத்து நாடாளுமன்றத்தைக் கலைக் கக் கோரினாலன்றி, அடுத்த ஆண்டு ஓகஸ்ட் வரை இந்த நாடாளுமன்றமே தொடரும்.

ஆனால், இந்த இரண்டையும் விட இப்போது உடனடியாக நடத்தப்பட வேண்டிய தேர்தல் ஒன்று உண்டு. அது மாகாண சபைத் தேர்தல். நாட்டில் உள்ள ஒன்பது மாகாண சபைகளில் ஆறு மாகாண சபைகளின் பதவிக் காலம் ஏலவே முடிந்து விட்டது. இந்த ஆறு மாகாண சபைகளும் இப்போது ஆளுநர் களின் நிர்வாகத்தின் கீழ் வந்துவிட்டன.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களைத் தள்ளிப் போடு வது மக்களின் இறைமையில் கை வைக்கும் வேலை என்று உயர்நீதிமன்றமே கருத்துரைத்து உள்ளது.

ஆனால் அரசியல்வாதிகள், ஆட்சித் தரப்பினர் மக்களின் இறைமையில் கை வைக்கும் திருக்கூத்தை எந்தக் கூச்ச நாச்சமும் இல்லாமல் செய்த வண்ணம் உள்ளனர்.

எல்லா மாகாண சபைகளுக்கும் ஒரே நேரத்தில் புதிய தேர்வு முறைமையின் கீழ் தேர்தல் நடத்துவதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்ற காரணத்தைக் கூறிக் கொண்டு மாகாண சபைகளுக்கான தேர்தல் சட்டங்களை மாற்ற முயன்றது இதுவரை ஆட்சியில் இருந்த நல்லாட்சி அரசு. இருந்த சட் டத்தை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மூலம் இரத் துச் செய்த நல்லாட்சி அரசு, அதற்கு மாற்றான தேர்வு முறை அடங்கிய புதிய சட்டத்தை இன்னும் கொண்டு வரவே இல்லை. அதைக் கொண்டு வருவதற்கான இணக்கப்பாடு நாடாளு மன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இடையே இப்போது இல்லை என்று காரணம் கூறிக் காலத்தை இழுத்தடித்து வருகின்றார்கள். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சி கள் இடையே இப்போதைக்கு இது விடயத்தில் இணக்கம் வருவதற்கோ, அதனடிப்படையில் தேவையான சட்டத்தை உரு வாக்குவதற்கோ சாத்தியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால் இந்த விவகாரம் அவிழ்க்கப்பட முடியாத ஒரு முடிச் சாக – விபரீதச் சிக்கலாக – நீடிக்கின்றது. இப்போதைக்குப் புதிய சட்டமும் வராது. அதனால் அந்தத் தேர்தல்களும் நடத் தப்படவே மாட்டாது என்ற நிலைமையே நீடிக்கின்றது.

அரசியல் தரப்புகள் – குறிப்பாக ஆளும் கட்சியினர் – நினைத்தால் இந்தச் சிக்கலுக்கு விரைந்து தீர்வு காணலாம்.

முன்னர் இரத்துச் செய்யப்பட்ட தேர்தல் முறைமையின் கீழ் – மீண்டும் பழைய சட்டத்தின் பிரகாரம் – இந்தத் தேர்தல் களை நடத்த வேண்டும் என்ற ஒரு பிரேரணையை நாடாளும ன்றத்தில் சாதாரண பெரும்பான்மையின் கீழ் நிறைவேற்றினால் போதும். உடனடியாகவே பழைய முறைப்படி மாகாண சபைத் தேர் தல்களை நடத்தி விடமுடியும் என சட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், சட்ட விற்பன்னரும், ஜனாதிபதி சட்டத்தரணியு மான எம்.ஏ.சுமந்திரன் கூட இதனை உறுதிப்படுத்தியிருந்தார்.

ஒக்ரோபர் 26 ஆம் திகதி அரசியல் சூழ்ச்சி மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் ரணிலையையும் அவரது அரசையும் மீண்டும் பதவிக் கட்டுக்குக் கொண்டு வருவதற்கு முழுமூச்சில் செயற்பட்டது கூட்டமைப்பு.

*"அது, ரணிலுக்காகவோ, ஐக்கிய தேசியக் கட்சிக்காகவோ செய்யப்பட்ட வேலை அல்ல. ஜனநாயக மீட்புக்கான பணி அது"* என்று கூட்டமைப்பு விளக்கம் வேறு கூறுகின்றது.

சரி. இன்றும் ரணிலின் அரசு பெரும்பான்மைக்கு கூட்ட மைப்பின் ஆதரவில்தான் தங்கி நிற்கின்றது.

அந்தச் சூழலில் – பின்புலத்தில் –

மாகாண சபைத் தேர்தலை இழுபடவிடாமல் நடத்தும் ஜன நாயகப் பணிக்காக, அந்தச் சட்டத்தை அடுத்த ஒரு மாதத் துக்குள் கொண்டு வந்து பழைய முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் என்று நிபந்தனை விதித்து, இந்த அரசைக் கொண்டு நடவடிக்கை எடுக்கச் செய்யும் திராணி கூட்டமைப்புக்கு உண்டா?

கூட்டமைப்பு நினைத்தால் மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்தச் செய்யலாம். கூட்டமைப்புக்கு அது ஒரு சின்ன வேலை.

ஆனால், விருப்பமும், மனத்திராணியும், வாக்காளர்களைச் சந்திக்கும் தைரியமும் அதற்கு வேண்டும். அவை இருந்தால் அவர்கள் அதனைச் செய்து காட்டலாம்.

# சர்வாதிகார ஆட்சியால் மக்களுக்கு பயனில்லை

## நாமல் கூறும் ஆலோசனை இது



கொழும்பு, ஜன. 05

நல்லாட்சி மற்றும் ஜனநாய கம் என்னும் போர்வையில் இந்த அரசு சர்வாதிகார ஆட்சியை முன்னெடுக்குமாயின், அதனால் பொதுமக்களுக்கு எவ்வித நன் மையும் இல்லை என நாடாளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தல் தொடர்பான கூட்டத்தைத் தொடர்ந்து ஊடகங் களுக்கு கருத்து தெரிவிக்கை யிலேயே இவ்வாறு குறிப்பிட் டார்.

அவர் மேலும் கூறுகையில் –

நல்லாட்சி அரசாங்கம் கடந்த நான்கு ஆண்டுகளாக ஆட்சி செய்திருப்பினும், இந்தக் காலப் பகுதியில் மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப்பெற வில்லை. இந்த அரசு கற்பனை கதைகளை கூறுவதற்கே திற மையானது. – என்றார். (ஐ)

# பழைமை வாய்ந்த மரங்களை விற்கும் முயற்சி முறியடிப்பு



கொழும்பு, ஜன. 05

பொலனறுவை தேசிய சோமா வதி சரணாலயத்திலுள்ள பழ மையான மரங்கள் சட்டவிரோ தமாக வெட்டப்பட்டு விற்பனை செய்ய முற்பட்ட வேளை மகா வலி பாதுகாப்பு அதிகாரிகளால் அவை கைப்பற்றப்பட்டுள்ளன.

சோமாவதி சரணாலயத்திற் குட்பட்ட தஹம்வெவ பிரதேசத் தில் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை இரவு முன்னெடுக்கப் பட்ட அதிரடிச் சோதனையின் போதே இவை கைப்பற்றப் பட்டன.

மர வியாபாரிகளால் அங்கி ருந்த பழமையான மரங்கள் சட்டவிரோதமாக வெட்டப்பட் டுள்ளன. வெட்டப்பட்ட மரங் களை மரக்குற்றிகளாக்கி விற் பனை செய்ய முற்பட்டவேளை யிலேயே, இந்தச் செயற்பாடு அதிகாரிகளால் கண்டறியப்பட்டு முறியடிக்கப்பட்டது.

எனினும், அதிகாரிகளின் வரு கையை அறிந்து சந்தேகநபர் கள் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் விலையுயர்ந்த பளு, முதிரை, குபுக் போன்ற மரக்குற்றி களே கைப்பற்றப்பட்டன என் றும், அவற்றின் பெறுமதி சுமார் 7 இலட்சம் ரூபா என்றும் அதி காரிகள் தெரிவித்தனர். (ஐ)

## சுற்றுலாப் பயணிகள் வருகை கடந்த ஆண்டில் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 05

கடந்த 2017 ஆம் ஆண்டை விட 2018 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதி காரசபை அறிவித்துள்ளது.

அதிகாரசபை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் சுற்றுலாப் பயணிகள் வருகை அதற்கு முன்னைய வருடத்தை விடவும் 10 சதவீதம் அதிகமானதாகும். அதாவது 2017 ஆம் ஆண்டில் 21 இலட்சம் உல்லாசப் பயணி கள் வருகை தந்த அதேவேளை, 2018 ஆம் ஆண்டில் 23 இலட்சம் பேர் வருகை தந்துள்ளனர்.

கடந்த வருடத்தின் ஏனைய மாதங்களுடன் ஒப்பிடும்போது டிசெம்பரிலேயே அதிக எண்ணிக்கையான உல்லாசப் பயணிகள் (250,000 பேர்) வந்திருந்தனர் எனவும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## வெளிநாட்டு சிகரெட்டுகளை கடந்தி வந்தவர் கைதாகினார்

வெளிநாட்டு சிகரெட்டுகளைக் கடத்தி வந்த இலங்கைப் பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என சுங்கப்பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நபர் நேற்று அதிகாலை கொழும்பு கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப்பிரிவு அதிகாரிகளால் கைது செய் யப்பட்டார்.

விமான நிலையத்தில் சந்தேகநபர், சந்தேகத்திற்கிடமாக நடமாடியதால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின்போதே சிகரெட் பொதிகள் கைப்பற்றப்பட்டன.

இதன்போது சுமார் 16 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய 150 பெட்டிகளில் பொதி செய்யப்பட்ட 30,000 வெளிநாட்டு சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் குளியாப்பிட்டிய பிரதேசத் தைச் சேர்ந்த 24 வயதுடையவர் என ஆரம்பக் கட்ட விசாரணை களின் மூலம் தெரியவந்துள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார். (ஐ)

## பீடைகளை கட்டுப்படுத்த ட்ரோன் தொழில்நுட்பம்

கொழும்பு, ஜன. 05

பயிர்ச்செய்கைகளைப் பாதிக் கும் பீடைகளைக் கட்டுப்படுத்து வதற்கு ட்ரோன் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது.

இதற்கான பரீட்சார்த்த நட வடிக்கை, கலென்பிந்துனு வெவ சோளப் பயிர்ச்செய்கைக் காணியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தத் திட்டம் வெற்றி பெறும் பட்சத்தில், பெருமளவில் சோளப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ள சேனைகளுக்கும் இதனை விஸ்தரிப்பதற்கு விவ சாய அமைச்சு தீர்மானித்துள் ளது.

விவசாய அமைச்சர் பி.ஹரிசன் வழங்கிய ஆலோசனைக்கு அமைய, ட்ரோன் விமானங்களைப் பயன்படுத்தி பீடைகளைக் கட்டுப் படுத்தும் முயற்சியை இலங்கை யில் முதன்முறையாக விவசாயத் திணைக்களம் ஆரம்பித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாளை

06.01.2019
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : பூராடம் மா. 6.19 வரை
திதி : அமாவாசை கா. 7.36
சுபநேரம் : 9.31 – 11.01 வரை
இராகுகாலம் : 5.01 – 6.31 வரை

# தோட்டத் தொழிலாளர்களுக்கு விரைவில் நியாயமான சம்பளம்

## அமைச்சர் வடிவேல் சுரேஸ் உறுதி

கொழும்பு, ஜன. 05

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குக் கூடிய விரைவில் நியாயமான சம்பளத்துடன், உரிய தீர்வைப்பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ் உறுதியளித்துள்ளார்.

பிரதமரின் பணிப்புரைக்கமைய இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு சம்பந்தமாக கடந்த காலங்களில் பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன.

சம்பள அதிகரிப்பு தொடர்பில் தற்போது சமூக வலைத்தளங்களில் முன்னுக்குப் பின் முரணான பல்வேறு கருத்துக்களும், செய்திகளும் வெளியாகி வருகின்றன. அவை உண்மைக்குப் புறம்பானவை. சம்பள உயர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் அறிவிக்கும் அறிவிப்பே உத்தியோகபூர்வமானது.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திசாநாயக்க வெளிநாடு சென்றுள்ளார். ஓரிரு நாள்களில் அவர் நாடு திரும்பியவுடன், தொழிலமைச்சு ஊடாக பெருந்தோட்ட நிறுவனங்களுடன் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டு வெகு விரைவில் தீர்வு காணப்படும்.

இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பணிப்புரை வழங்கியுள்ளார். இதற்கமையவே இந்த முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றோம். இந்த விடயம் தொடர்பில்ச தொழிற்சங்க உறவுகள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் தயா கமகேயுடன் நாளாந்தம் பேசி அதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகின்றேன்.



இம்முறை நியாயமான சம்பளத்துடன் நிலுவைப் பணத்தையும் பெற்றுக் கொடுக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட தொழிற்சங்கங்கள் உறுதியாகவுள்ளன.

நாம் இந்த விடயத்தில் முயற்சிகளை மேற்கொள்ளவில்லையெனச் சிலர் குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் நாங்களும் அந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். எனவே இந்தப் பிரச்சினைக்கு கூடிய விரைவில் முடிவெடுப்போம் – என்றார். (ஐ)

# சந்திரிகாவுடன் உள்ளவர்களின் அமைப்பாளர் பதவிகள் 'அவுட்'

கொழும்பு, ஜன. 05

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு முண்டு கொடுக்கத் தயாராகும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களின் பதவியை பறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அந்தக் கட்சியின் பொருளாளர் எஸ்.பீ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

இந்த அமைப்பாளர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றும் அமைச்சுப் பதவிகளுக்கு ஆசைப்பட்டு ஐ.தே.கவில் இணைந்து கொள்வதற்கு இரகசியப் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன – என்றார். (ஐ)

# பருத்தித்துறை பிரதேச ஓய்வூதியருக்கான அறிவுறுத்தல்

பருத்தித்துறை, ஜன. 05

வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளும் ஓய்வூதியர்கள் தொடர்பான வதிவிடச் சான்றிதழ்கள் எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் கிராம உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும்.

அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து ஓய்வூதிய கொடுப்பனவுகள் தற்காலிகமாக நிறுத்தப்படும் எனவும் இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள தங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தரினை தொடர்பு கொள்ளுமாறும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார்.

## பேராசிரியர் ஜோன் மனோகரன் கென்னடியின்

# நினைவஞ்சலியும் நூல்வெளியீடும் நாளை காரைநகர் இந்துக் கல்லூரியில்



காரைநகர், ஜன. 05

பேராசிரியர் ஜோன் மனோகரன் கென்னடி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, காரைநகர் இந்துக் கல்லூரி நடராஜா ஞாபகார்த்த மண்டபத்தில் காரைநகர் பிரதேச சபை தவிசாளர் விஜயதர்மா கேதீஸ்வரதாசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்கினேஸ்வரனும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் ச.தில்லைநாயகமும் கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வுநிலை போராசிரியர் செ.யோகராசாவும் கல்வி இராஜங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் கலந்துகொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், கல்வியாளர்கள் பலரும் கலந்து கொள்கின்றனர்.

தவிசாளரின் தலைமையுரையைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள், பிரதம விருந்தினர்கள் நினைவுரைகள் நிகழ்த்துவர். நூல் வெளியீட்டுரையை பேராசிரியர் ச.தில்லைநாயகம் ஆற்றுவார். துணைவேந்தர் இ.விக்கினேஸ்வரன் நூலை வெளியிட்டு வைப்பார். முதற்பிரதியை பேராசிரியர் சங்கரலிங்கம் தில்லைநாயகம் பெற்றுக் கொள்வார். யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் (ஆங்கில இலக்கியம்) கலாநிதி வீரமங்கை ஸ்ராலினா யோகரத்தினம் நன்றியுரை ஆற்றுவார். (இ)

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு

இணுவில், ஜன.05

இணுவில், உடுவில் கிழக்கு அண்ணா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு, நிலைய முன்றிலில் அதன் தலைவர் மு.புவீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள் ச.சுகிர்தன், கே.சயந்தன், பா.கஜதீபன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக கிருபா லேணர்ஸ் அதிபர் அ. கிருபாகரன், இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் தி.தேவதயாளன், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் இ. துரைசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர். (இ)

# யாழ் மாவட்ட 3 கைத்தொழில் முயற்சியாளருக்கு தரச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கொழும்பில்!

யாழ் மாவட்ட கைத்தொழில் முயற்சியாளர்களான மூன்று நிறுவனங்களுக்கு 'ISO 14001' தரச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றதாக யாழ்ப்பாணம் கைத்தொழில் அபிவிருத்திச் சபை உதவிப் பணிப்பாளர் கா.சசிதரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளவை வருமாறு –

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் நிதிப்பங்களிப்புடன் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நாடளாவிய ரீதியில் பதினான்கு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு 'ISO 14001' தரச் சான்றிதழினை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் விசேடமாக யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று கைத்தொழில் முயற்சியாளர்களான அன்னை கடல் உணவு வாணிபம், அண்ணா தொழிலகம் மற்றும் சாரா (மின்பொறியியல்) கைத்தொழில் ஆகிய நிறுவனங்கள் தமக்குரிய சான்றிதழினை டிசெம்பர் 27 ஆம் திகதி கொழும்பு 01 உள்ள 'மிலோடா' நிதி கற்கைகள் அக்கடமியில் உள்ள அந்தோனி டீ அஞ்சலோ கேட்போர்கூடத்தில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பெற்றுக் கொண்டனர்.

அத்தோடு சான்றிதழ் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிறுவன ரீதியான மாற்றம், பயிற்சி வழங்கல், மற்றும் தரச் சான்றிதழிற்குரிய விண்ணப்பப் பணம் என்பவற்றுக்கு ஏற்பட்ட செலவில் 50 வீதத்தை மானியமாக வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு இதற்கான காசோலை அன்றைய தினம் வழங்கப்பட்டது.

கைத்தொழில் செயல்திறன் மேம்பாட்டிற்கு மேலதிகமாக நிறுவனங்கள் 'ISO 14001' தரநிலைகளை பின்பற்றுவதன் மூலம் சட்டபூர்வ மற்றும் ஒழுங்கு முறை தேவைகளுடன்; சிறந்த இணக்கப்பாடு உள்ளிட்ட பல பொருளாதார நலன்களை பெற்றுக் கொடுக்கின்றது.



சுற்றுச்சூழலுக்கும் கைத்தொழிலிலுக்கும் இடையே சிறந்த ஒருங்கிணைவை ஏற்படுத்துவதற்காக 'ISO 14001' முதன்மையாக உருவாக்கப்பட்டது. இது அவர்களின் சுற்றுச் சூழல் தாக்கங்களை குறைப்பதோடு உற்பத்தியின் தரம் உயர்த்தப்பட்டு வீண் செலவீனங்களை குறைக்கின்றது. அத்துடன் உற்பத்தி பொருளிற்கான கேள்வியினை அதிகரித்து சந்தை வாய்ப்பினை விஸ்தரித்து ஏற்றுமதிக்கான அடித்தளத்தினையும் அமைக்க முடிகின்றது. – என்றுள்ளது.

# புதுடில்லியில் காஸ் சிலிண்டர் வெடித்து கட்டடம் இடிந்ததில் ஏழு பேர் உயிரிழப்பு



புதுடெல்லி,ஜன.05

டெல்லியில் அடுக்கு மாடிக்கட்டடம் வெடித்ததில் அக்கட்டடம் இடிந்து 7 பேர் கொல்லப்பட்டனர்.

டெல்லியில் சுதர்ன் பூங்கா பகுதியில் 2 அடுக்குகள் கொண்ட கட்டடம் ஒன்றில் இருந்த சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்று நேற்றி முன்தினம் இரவு திடீரென வெடித்துள்ளது. இதில் கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது.

இந்த கட்டடத்தில் மின் விசிறிகளுக்கு பெயிண்ட் அடிக்கும் வேலைகள் நடந்து வந்துள்ளன. மக்கள் நெருக்கடி அதிகம் நிறைந்த பகுதியில் இந்த சம்பவம் நடந்துள்ளது. தீயணைப்பு வீரர்கள் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு உடனடியாக சென்றனர். அங்கிருந்து 15 பேர் மீட்கப்பட்டு ஆச்சார்யா பிக்சு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்களில் 5 வயது குழந்தை உள்பட 7 பேர் பலியாகினர். 4 பேரின் நிலைமை கவலைக்குரிய வகையில் உள்ளது. அவர்கள் சப்தர்ஜங் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டு உள்ளனர். கட்டடத்தின் இடிபாடுகளில் இன்னும் சிலர் சிக்கியிருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது.

# ஒடிஸாவை ஒரு கை பார்க்க தயாராகின்றது 'பபுக்' புயல்!



புவனேஷ்வர்,ஜன.05

தென் சீன கடலில் உருவான 'பபுக்' புயலால் இந்தியாவின் ஒடிஸாவில் உள்ள 7 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென் சீன கடலில் உருவான, 'பபுக்' என்ற புயல், நேற்று இந்தியாவின் வங்க கடல் பகுதிக்குள் நுழைய இருந்தது. இந்தப் புயல், அந்தமான் தீவுகளைத் தாண்டி, வடமேற்கில் நகர்ந்து, மத்திய வங்கக் கடலுக்குள் நுழையும். பின், வட கிழக்கு திசையில் நகர்ந்து, மியான்மர் செல்லும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 'பபுக்' புயலை ஒட்டி ஒடிஸா மாநிலத்தில் உள்ள 7 மாவட்டங்களுக்கு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் புயல் இன்று சனிக்கிழமை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. 'பபுக்' புயல் நாளை அந்தமான் தீவுகளை கடந்து செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மூன்று நாள்களுக்கு, வங்கக் கடலில் அலைகள் கொந்தளிப்புடன் காணப்படும். இதனால், மத்திய வங்கக் கடல் மற்றும் கிழக்கு பகுதிக்கும், அந்தமான் பகுதிக்கும், மீனவர்கள் செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைளை மேற்கொள்ளுமாறு பாலாசூர், பதாரக், ஜெகதிஷ்சிங்பூர், கேந்திரபாரா, பூரி, கஞ்சம் மற்றும் குத்ரடா ஆகிய 7 மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# இலங்கைப் பெண் பக்தை ஐயப்பனைத் தரிசித்தாரா?




திருவனந்தபுரம்,ஜன.05

சபரிமலை ஐயப்பன் கோயிலில் வியாழக்கிழமை இரவு சசிகலா என்ற 46 வயதுடைய இலங்கைப் பெண் ஒருவர் தரிசனம் செய்தார் எனத் தகவல்கள் வெளியான நிலையில் அவர் அதனை மறுத்திருக்கிறார்.

இது தொடர்பாக அவர் ஏ.என்.ஐ.செய்தி நிறுவனத்திடம் கருத்துத் தெரிவித்தார். நான் 48 நாள்கள் ஐயப்பனுக்கு விரதம் இருந்தேன். 18 படிகளில் ஏறினேன். அப்போது என்னை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனால் என்னால் சாமி தரிசனம் செய்ய முடியவில்லை. நான் உண்மையான ஐயப்ப பக்தை. என்னை ஏன் பொலிஸார் தடுத்து நிறுத்தினர்? என்று கேட்டார் அவர்.

ஆனால், சில ஊடகங்களில் சசிகலா 18 படிகளில் ஏறி ஐயப்ப தரிசனம் செய்தார் எனவும், அதனைக் கேரளப் பொலிஸார் உறுதி செய்தனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலில் அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்குமாறு உச்ச நீதிமன்றம் கடந்த ஆண்டு செப்டெம்பர் 28ஆம் திகதி தீர்ப்புக் கூறியது.

இத்தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதில் கேரள இடதுசாரி அரசு முனைப்பு காட்டிய நிலையில், சபரிமலை ஐயப்பன் நைஷ்டிக பிரம்மச்சாரி என்பதால் பெண்களை அனுமதிக்கமாட்டோம் எனபா.ஜ.க. மற்றும் இந்து அமைப்புகள் போராட்டம் நடத்தின.


இதனால் சபரிமலை நடை திறக்கப்படும் போதெல்லாம் பிரச்சினை வெடித்தது. இதனால் நடை திறக்கும் காலங்களில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், மகரவிளக்கு பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோயில் நடை கடந்த 30 ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட்டது. அப்போது, மலப்புரம் பகுதியைச் சேர்ந்த கனகதுர்கா (44), கோழிக்கோடு பகுதியை சேர்ந்த பிந்து அம்மினி (40) ஆகிய பெண்மணிகள் புதன்கிழமை அதிகாலை சபரிமலை ஐயப்பனைத் தரிசனம் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து கேரளாவில் முழு அடைப்புப் போராட்டம் வியாழனன்று நடந்த நிலையில் நேற்றிரவு மேலும் ஒரு பெண் தரிசனம் செய்தார் எனத் தகவல் வெளியாகி பரபரப்பு ஏற்பட்டது. ஆனால், சம்பந்தப்பட்ட பெண்ணோ இதனை மறுத்திருக்கிறார். பொலிஸ், பக்தை சொல்லும் முரண்பட்ட தகவல்களால் குழப்பம் நீடிக்கிறது.

# ராமர் கோயில் கட்டும் விடயத்தில் ஏமாற்றிவிட்டார் பிரதமர் மோடி!

## அயோத்தி சாதுக்கள் மனவருத்தம்



அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதாக வாக்குறுதி அளித்த பிரதமர் மோடி ஏமாற்றி விட்டார் என்று அயோத்திய சாதுக்கள் கூறியுள்ளனர்.

ஒரு செய்தி சேனலுக்கு பேட்டி அளித்த பிரதமர் மோடி ராமர் கோயில் வழக்கின் தீர்ப்பு வெளியான பின்னரே கோயில் கட்டுவதில் சட்டத்திற்கான முடிவு எடுக்க முடியும் என பதிலளித்திருந்தார்.

இந்நிலையில் ராமர் கோயிலில் அர்ச்சகரான மஹந்த் சத்யேந்திரதாஸ் கூறியவை வருமாறு:-

ராமர் கோயில் கட்டுவதற்காகவே 2014 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் மக்கள். மோடிக்கு வாக்களித்தனர். ஆனால் அரசியல் ஆதாயத்திற்காக அந்த முயற்சி இழுத்தடிக்கப்படுகிறது. ராமர் கோயில் கட்டுவதன் மீதான பிரதமரின் பதிலால் அயோத்தியில் உள்ள சாதுக்களும், நாட்டு மக்களும் பலத்த ஏமாற்றம் அடைந்துள்ளனர். அயோத்தியில் நிரந்தரமாக ராமர் கோயில் கட்டப்பட வேண்டும் என விரும்பும் அனைவரையும் மோடி ஏமாற்றி விட்டார்.

கோயிலின் உதவி அர்ச்சகர் மஹந்த் கமல் நாயன் கூறுகையில், "கோயில் கட்டுவதற்கு ஒரு பெரிய காரணத்தை பிரதமர் மோடி கூறுகிறார். மத்தியில் அவர் பிரதமராகவும், உ.பி.யில் அவரது கட்சியும் ஆட்சியில் இருந்து பலன் ஏதும் இல்லை" எனத் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன் அயோத்தி சாதுக்களை சந்தித்த பா.ஜ.க. தேசிய தலைவர் அமித்ஷா, ராமர் கோயில் கட்டுவதற்காக அவசர சட்டம் இயற்றுவதில் பல சிக்கல்கள் உள்ளன எனக் கூறியமை குறிப்பிடத்தக்கது.

# வீதியோரத்தில் கேட்பாரற்றுக் கிடந்த 1 கோடி ரூபா பெறுமதித் தங்கக் கட்டிகள்

## தரங்கம்பாடி பொலிஸ் சோதனைச் சாவடிக்க. அருகில்



கீநாகை மாவட்டம் தரங்கம்பாடி அருகிலுள்ள காவல்துறை சோதனைச் சாவடி அருகே கேட்பாரற்றுக் கிடந்த பையில் இந்தியப் பணத்தில் சுமார் ஒரு கோடி ரூபா (இலங்கைப் பணத்தில் சுமார் இரண்டரைக் கோடி ரூபா) மதிப்பிலான தங்கக் கட்டிகள் இருந்தமையை பொலிஸார் கைப்பற்றி விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

தரங்கம்பாடி அருகிலுள்ள நண்டலாறு சோதனைச் சாவடி அருகே கேட்பாரற்று கிடந்த பையை சோதனைச் சாவடியில் பணியில் இருந்த காவலர்கள் எடுத்து, பொறையாறு காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

### 27 தங்கக் கட்டிகள்

அந்தப்பையை சோதனையிட்ட போது, அதில் மொத்தம் 3,075 கிராம் எடை கொண்ட 27 தங்கக் கட்டிகள் இருந்தமை தெரியவந்தது. இதன் மதிப்பு ஏறத்தாழ ரூ.1 கோடி இருக்கும் எனக் கூறப்படுகிறது.

இதுகுறித்து, காவல்துறை தரப்பில் விசாரித்தபோது, புத்தாண்டு தினத்தை யொட்டி பொலிஸார் சோதனைச் சாவடிகளில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அந்த நேரத்தில் அவ்வழியாக தங்கம் கடத்திவந்த கடத்தல்காரர்கள் பொலிஸாருக்குப் பயந்து, தங்கக் கட்டிகள் இருந்த அந்தப் பையைச் சாலையோரத்தில் வீசிவிட்டுத் தப்பியிருக்கலாம் எனச் சந்தேகிப்பதாக தெரிவித்தனர்.

# பாகிஸ்தானோடு நல்லுறவு ‘அவுட்’! அமெரிக்க அதிபர் டிரம்ப் காட்டம்

வொஷிங்டன்,ஜன.05

பாகிஸ்தானோடு அமெரிக்கா தொடர்ந்தும் நல்லுறவைக் கடைப்பிடிக்க முடிய வில்லை என்றும், எதிரிகளுக்கு அந்தநாடு அடைக்கலம் தருகின்றது என்றும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் காட்டமாகக் கூறினார்.

உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவின் கூட்டாளியாக பாகிஸ்தான் உள்ளது. இதற்காக பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆண்டுதோறும் நிதி உதவி அளித்து வந்தது.

ஆனால் அந்த நிதியைப் பாகிஸ்தான் பெற்றுக்கொண்டு, தனது சொந்த நாட்டில் உள்ள பயங்கரவாத அமைப்புகளை பாரபட்சமின்றி ஒடுக்கத் தவறி விட்டது என்பது அமெரிக்காவின் கருத்தாக உள்ளது.

இது தொடர்பாக பாகிஸ் தானை வெளிப்படையாக கண் டித்த ஜனாதிபதி டிரம்ப், பாகிஸ்தா னுக்கு அளித்து வந்த கோடி கணக்கிலான அமெரிக்காவின் பெரும் நிதி உதவிகளை நிறுத்தி னார்.



கடந்த நவம்பர் மாதம் ஆப்கானிஸ்தானுக்கான புதிய கொள்கையை வெளியிட்டடிரம்ப், பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் பாகிஸ்தான் இரட்டை வேடம் போடுவதாகவும், அந் நாட்டுக்கு வழங்கப்பட்டு வரும் ஆயிரத்து 300 கோடி டொலர் (இலங்கைப் பணத்தில் சுமார் 2 லட்சத்து 35 ஆயிரம் கோடி ரூபா) நிதி நிறுத்தப்படுவதாக அறிவித்தார்.

இந்த நிலையில் அமெ ரிக்காவில் இந்த ஆண்டின் முதல், மந்திரி சபைக் கூட்டம் புதனன்று நடந்தது. இதில் ஜனாதிபதி டிரம்ப் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் இவ்விடயம் குறித்து அவர் கூறியவை வருமாறு:-

பாகிஸ்தானுடன் நாம் நல்லுறவை கடைப்பிடிக்க விரும்புகிறோம். ஆனால் அந் நாடு எதிரிகளுக்கு அடைக்க லம் தருகிறது. எதிரிகளை பாது காக்கிறது. இதனால் அந்த நாட்டுடன் நல்லுறவை கடைப் பிடிக்க முடியவில்லை.

பாகிஸ்தானின் புதிய அர சுடன் நான் பேச்சு நடத்த விரும்புகிறேன். காலம் தாழ்த் தாமல் அதனை உடனே செய்ய வேண்டும்.

அதே சமயம் பாகிஸ்தா னுக்கு நிதி உதவியாக வழங் கிய வந்த 1.3 பில்லியன் டொலரை நான் நிறுத்திவிட் டேன்.- இவ்வாறு அவர் பேசி னார்.

தொடர்ந்து பேசிய டிரம்ப், வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன்னிடம் இருந்து தனக்கு ஒரு சிறப்பான கடிதம் கிடைத் ததாகவும், கிம் ஜாங் அன்னை விரைவில் சந்திப்பேன் என்றும் தெரிவித்தார்.

(அ)

# அடேங்கப்பா குடும்பம்!

உலகிலேயே மிகப் பெரிய குடும்பம் உக்ரைன் நாட்டில் இருக்கிறது.

டோப்ரஸ்லாவ் கிராமத்தில் வசிக்கும் 87 வயது பாவெல் செமன்யுக் குடும்பம்தான் இந்தப் பெருமைக்குரியது. இவருக்கு 13 குழந்தைகள். 127 பேரன், பேத்தி கள். 203 கொள்ளுப் பேரன், பேத்திகள். 3 எள்ளுப் பேரன், பேத்திகள் என மொத்தம் 346 பேர் இந்தக் குடும்பத்தில் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.



எங்கள் குழந்தைகள், பேரன், பேத் திகள்வரை பெயர்களை நினைவில் வைத்திருக்கிறேன். மற்றவர்களின் பெயர்கள் நினைவில் இருப்பதில்லை. நாங்கள் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறோம்.

எங்கள் குடும்பம் பெருகப் பெருக, இந்தக் கிராமத்திலேயே வீடுகளைக் கட்டி விடுவோம். பிறந்தநாள், திருமண நாள் போன்ற நிகழ்ச்சிகளில் குடும் பத்தினர் ஒன்று கூடிவிடுவோம். பெரிய பெரிய பாத்திரங்களில் உணவுகள் தயார் செய்ய வேண்டியிருக்கும். கிட்டத்தட்ட ஆண்டு முழுவதுமே கொண்டாட்டமாகத்தான் இருக்கும்.

எங்கள் குடும்பத்திலிருந்து மட்டும் 30 குழந்தைகள் பள்ளிக்குச் செல் கிறார்கள். இவர்களுக்கே ஒரு பேருந்து தேவைப்படுகிறது. சமீபத்தில் தான் உக்ரைன் நாட்டின் மிகப் பெரிய குடும்பமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கி றோம். இப்போது கின்னஸுக்கும் விண்ணப்பித்திருக்கிறோம் என்கிறார் பாவெல் செமன்யுக்.

தற்போது 192 பேர் அடங்கிய மிகப் பெரிய இந்தியக் குடும்பம், உலகின் மிகப் பெரிய குடும்பம் என்ற கின்னஸ் சாதனையை தக்க வைத்திருக்கிறது. நிச்சயம் பாவெல் இதை முறியடித்து விடுவார்.

# ஈரானில் போரை உருவாக்க திட்டமிடுகிறதாம் அமரிக்கா!

## அந்நாட்டுத் தலைவர் கொமேனி குற்றச்சாட்டு

தெஹ்ரான்,ஜன.05

ஈரானில் போரை உருவாக்க அமெ ரிக்கா திட்டமிடுவதாக அந்நாட்டுத் தலைவர் அயத்துல்லா அலி கொமேனி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அனடோலு செய்தி நிறு வனத்துக்குக் கருத்துத் தெரிவித்த அவர் பொருளாதாரத் தடை மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகளைப் பயன்படுத்தி ஈரானில் போரை உருவாக்க அமெரிக்கா திட்ட மிடுகிறது. எனவே ஈரான் மக்கள் கவன மாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆயுதத் தேவையை அதிகரிக்கச் செய்து இந்த பிராந்தியத்தில் ஆபத்தான நிலையை அமெரிக்கா உண்டாக்குகிறது என்று கடந்த வாரம் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் முகமத் அமெரிக்காவை விமர்சித்திருந்தார்.

ஈரானுடன் அமெரிக்கா செய்து கொண்ட அணு ஆயுத ஒப்பந்தத்தி லிருந்து விலகுவதாக அமெரிக்க அதி பர் டொனால்ட் ட்ரம்ப் கடந்த வருடம் தெரிவித்தார்.



ஆனால், ட்ரம்ப்பின் மிரட்டலைச் சிறிதும் பொருட்படுத்தாத அந்நாட்டு அதிபர் ஹசன் ரவ்ஹானி ஈரான் ஆக்கபூர்வமான செயல்களுக்கு அணு ஆயுத சோதனையைப் பயன்படுத்தும் என்றார்.

இதனைத் தொடர்ந்து ஈரான் மீது அமெரிக்கா தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை விதித்ததுடன் அந்நாட்டிலி ருந்து எந்த நாடும் மசகு எண்ணெய் இறக்குமதி செய்யக்கூடாது என்றும் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

# கொக்கில் பொருத்திய சிம் அட்டையை ’சுட்டு’ப் பயன்படுத்திய சூடான் கில்லாடி!

போலந்து நாட்டைச் சேர்ந்த ‘இகாலஜிக்ஸனா’ என்ற சுற்றுச் சூழல் அமைப்புக்கு திடீரென இந்தியப் பணத்தில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா (இலங்கை ரூபாவில் சுமார் 4 லட்சம்) பெறு மதியான தொகைக்கு அலைபே சிக் கட்டணம் செலுத்தச் சொல்லி தகவல் வந்தது. அதை பார்த்து அவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

விவரம் என்னவென்று விசாரித்துப் பார்த்ததில்தான் விவகாரம் விளங்கியது.

கொக்கின் உடலில் சிம் கார்ட், ஜி.பி.எஸ். கருவிகளைப் பொருத்தி, பறவைகளின் இடப்பெயர்ச்சி, செல்லும் பாதை, உணவுப் பழக்கம் போன்றவற் றைக் கவனிக்கத் திட்டமிட்டிருந்த னர். அதன்படி கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வெண் கொக்கு ஒன்று கருவிகளுடன் பறந்தது. ஓராண்டில் சுமார் 6 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் அது பறந்து செல்வதைக் கண்காணிக்க வேண்டும் என்பது திட்டம்.



ஆபிரிக்காவிலிருந்து போலந்து திரும்பும் வழியில் சூடானில் கொக்கு தங்கியிருந் தது ஜி.பி.எஸ். மூலம் தெரியவந் தது. இரண்டு மாதங்கள் ஆக 25 கி.மீ. தூரத்திற்குள்ளேயே கொக்கு பறந்து கொண்டிருப்ப தாகக் காட்டியது. திடீரென்று தொடர்பு கிடைக்காமல் போனது. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் காரணம் புரியாமல் தவித்தனர்.

தற்போது கொக்கு உடலில் வைக்கப்பட்டிருந்த சிம் அட் டைக்கு இவ்வளவு தொகை கட்டணம் செலுத்தச் சொல்லி பில் வந்து சேர்ந்திருக்கிறது.

தீவிர விசாரணையில் களம் இறங்கிய பிறகுதான் சூடானில் பறவையின் உடலில் இருந்து சிம் அட்டையை யாரோ திருடி, பயன்படுத்தியிருப்பது தெரிய வந்திருக்கிறது.

இப்படி எல்லாம் மனிதர்கள் இருந்தால், எப்படி ஆராய்ச்சி செய்வது என்று மிகவும் வருந்தி, மக்புத்தகத்தில் தகவல் வெளியிட்டிருக்கிறது இந்தச் சுற்றுச்சூழல் அமைப்பு.

# ஆப்கனில் தலிபான்களின் அதிரடியில் 8 பொலிஸார் பலி; ஆயுதங்களும் பறிப்பு

காபூல்,ஜன.05

ஆப்கானிஸ்தானில் தலி பான் தீவிரவாதிகளின் அதிர டித் தாக்குதலில் எட்டுப் பொலி ஸார் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தலி பான்களின் கொட்டத்தை ஒடுக்க ஆப்கன் வீரர்களும், அமெ ரிக்கப் படை வீரர்ளும் போராடி வருகின்றனர்.

நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள பக்லான் மற்றும் சமங் கன் மாகாணங்களை இணைக் கும் நெடுஞ்சாலையில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடி மீது தலிபான் தீவிரவாதிகள் புதன் இரவு திடீர் தாக்குதல் நடத்தினர்.

துப்பாக்கிகளால் சுட்டும், ரொக் கெட் வீசியும் அவர்கள் நடத் திய அதிரடித் தாக்குதலில் பொலிஸார் 8 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிர் இழந்தனர். மேலும் 2 பேர் படுகாயம் அடைந்தனர். அதே சமயம் பொலிஸார் நடத்தி ய பதில் தாக்குதலில் தீவிரவாதி கள் பலர் பலியாகினர் எனக் கூறப்பட்டது. எனினும் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என உறு தியான தகவல்கள் இல்லை. மேலும் தீவிரவாதிகள் சிலர் பொலிஸ் சோதனைச் சாவடியில் இருந்து துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை எடுத்துச் சென்ற னர் எனவும் கூறப்படுகிறது.



# இன்றைய அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில்

# நல்லதொரு தீர்வை காண முடியுமா? நான் நம்பவில்லை!

● எஸ்.நிதர்ஷன்

(நேற்றைய தொடர்ச்சி)



கேள்வி - ஒற்றையாட்சியின் அடிப்படையில் பௌத்தத்திற்கு முன்னுரிமை என்ற அடிப்படையிலையே தீர்வு அமையுமென தெற்கிலுள்ளவர்கள் கூறுகின்ற போது அவ்வாறான தீர்வு வந்தால் உங்கள் கருத்து என்ன? கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவாக அமையும்.

**பதில்** - தனிப்பட்ட முறையில் என்னால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் அது சம்பந்தமாகப் பேச வேண்டும். அவ்வாறு பேசி சரியானதொரு முடிவை எடுக்க வேண்டும். ஓரளவிற்கு தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வாக இருக்கும் என்று கருதுகின்ற தீர்வை நாங்கள் ஆதரிப்போம். அவ்வாறு இல்லாவிடின் அதனை நாங்கள் எதிர்ப்போம். ஆகவே மக்கள் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய தீர்வே எமக்கு வேண்டும் என்பதிலும் உறுதியாக இருக்கின்றோம்.

ஏனென்றால் இருக்கின்ற இந்த நிலையில் தொடர்ந்தும் பேசிக் கொண்டிருப்போம் பேசிக் கொண்டிருப்போம் என்று கூறி கடந்த எழுபது வருடங்களாக நாங்கள் பேசிக் கொண்டிருந்ததைப் போன்று இனியும் நாங்கள் பேசிக் கொண்டிருக்க முடியாது. அப்படி காலத்தை இழுத்தடிப்பது இனத்திற்கும் நல்லதல்ல. இதை இப்படியே பேசிப் பேசி கொண்டிருக்க முடியாது. ஆனால் இவ்வாறு பேசிக் கொண்டிருப்பதையே சிங்களத் தலைமைகள் சில வேளை விரும்பலாம்.

ஏனென்றால் கடந்த 70 வருடங்களுக்கு முன்பு இருந்தே பேசிக் கொண்டு வருகின்றோம். அவ்வாறு நாங்கள் பேசத் தொடங்கிய காலத்திற்கும் இன்றைய காலத்திற்குமிடையே எவ்வளவோ நாங்கள் பலவீனமாகி விட்டோம். குறிப்பாக ஆயுதப் போராட்ட காலத்திற்கும் இப்போது இருக்கின்ற காலத்திற்கும் இடையிலே கூட நாங்கள் மிகவும் பலவீனமாகவே உள்ளோம்.

ஆகவே இந்த நிலைமையை தொடர தொடர்ந்தும் விட்டுக் கொண்டிருப்போமேயானால் இன்னும் பலவீனமாகவே நாம் இருப்போம். ஆகவே தமிழ் மக்களுடைய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஒரு நியாயமான தீர்வு வேண்டும். அதாவது எங்களுடைய பகுதிகளிலே நாங்களே எங்கள் அலுவல்களைப் பார்க்கக் கூடியதாக கொடுத்த அதிகாரங்களை மீளப் பறிக்க முடியாத வாறான நிலையில் ஒரு தீர்வை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அப்படியான தொரு தீர்வுவருமா என்பது கேள்விக்குறி தான்.

ஏனென்றால் 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து மாகாண சபை முறைமையை எல்லாம் எதிர்த்தோம். இன்று நாங்கள் அதற்காக எங்களுக்குள்ளேயே அதன் முதலமைச்சர் யார், அமைச்சர்கள் யார் என்று போட்டி போடுகின்றோம். ஆகவே பலர் சொல்வதுபோன்று அன்றே அதனை நாங்கள் ஏற்றுக் கொண்டு இன்னும் பலப்படுத்தியிருக்கலாம். அதனை ராஜீவ் காந்தி இருந்த காலத்தில் செய்திருக்கலாம்.

ஆனால் அந்த இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்காமல் விட்டு அதனால் வந்த பின்விளைவுகள் மோசமானவை. இன்று இந்தியாவும் எமது பிரச்சினையில் மிகப் பெரிய அளவில் அக்கறை செலுத்தவில்லை. ஆகவே சில வேளைகளில் சில விடயங்களில் நாங்கள் ஆராய்ந்து முடிவுகளை எடுக்காமல் உணர்வுபூர்வமாக முடிவுகளை எடுப்போமானால் இன்னும் பின்தள்ளிப் போகும் நிலைமை வரும்.

**கேள்வி** - அரசமைப்பு உருவாக்கத்தில் ஒற்றையாட்சியா ஒருமித்த நாடா என்பது தொடர்பில் அதன் உருவாக்க காலத்திலும் அதற்குப் பின்னர் அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்ட காலத்திலும் எதுவும் பேசாமல் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைப்பதற்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்கியிருந்த நிலையில் அக் கட்சியினர் தற்போது ஒற்றையாட்சியின் அடிப்படையிலே தீர்வு ஒருமித்த நாடு என்ற பேச்சுக்கே இடமில்லை எனக் கூறி வருவதை கூட்டமைப்பு எவ்வாறு பார்க்கின்றது?

**பதில்** - எது எப்படி இருந்தாலும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டே ஆதரவு வழங்கப்பட்டது. தீர்வு முயற்சி மற்றும் கைதிகள் விடுதலை குறித்தும் சொல்லப்பட்டது. இவ்வாறு பல விடயங்கள் சொல்லப்பட்ட போது அதற்கு அவர்கள் எழுத்திலே உறுதிமொழி தருகிறோம் எனக் கூறினர். ஆனால் அது பெறப்பட்டதா இல்லையா என்பது தெரியாது. ஆகவே நாங்கள் எங்கள் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவாகக் கூறியே இந்த ஆதரவை வழங்கியிருந்தோம்.

ஆனாலும் மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அதிகாரத்திற்கு வர எமது மக்கள் விரும்பவில்லை என்பதாலும் ரணிலுக்கு ஆதரவு கொடுக்க வேண்டியும் இருந்தது. ஏனெனில் நாம் நடு நிலை வகித்தால் கூட மஹிந்த வந்துவிடுவார் என்ற நிலையே காணப்பட்டது. இதனை எமது மக்கள் பல தடவைகள் சொல்லியும் வெளிப்படுத்தியும் வந்துள்ளனர். கடந்த முறை ஜனாதிபதித் தேர்தலிலும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் எமது மக்கள் மஹிந்தவிற்கு எதிராகவே அதிகளவிலான வாக்குகளை வழங்கியிருக்கின்றனர். அதே போன்று இந்தநெருக்கடி நிலையிலும் மக்கள் அதனையே எம்மிடம் வெளிப்படுத்தியிருந்தனர். அதற்கமையவே கூட்டமைப்பின் செயற்பாடுகளும் அமைந்திருந்தன.

**கேள்வி** - இவ்வாறான நிலைமையிலும் திடீரென ஒருமித்த நாடு இல்லை. ஒற்றையாட்சி அடிப்படையில் தான் தீர்வு என்று பிரதமரும் அவரது கட்சியினரும் சொல்லுகின்றனர். அதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

**பதில்** - ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த நிலைப்பாடு தொடர்பில் முதலாவதாக அவர்களிடம் தான் கேட்க வேண்டும். அடுத்ததாக அவர்களைப் பொறுத்தமட்டில் தங்களுடையதும் தங்கள் கட்சியினுடைய நலன்களைப் பொறுத்து தான் செயற்படுவார்கள் பொதுவாக சிங்களத்தலைவர்களைப் பொறுத்தவரையில் தமிழர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டால் தங்களுடைய கட்சி தோல்வியடைந்து விடும் என்றே நம்புகின்றனர்.

ஆனால் சந்திரிகா பண்டாரநாயக்க அப்படியல்லர் என்பதை 1994 ஆம் ஆண்டு தேர்தலில் நிரூபித்துள்ளார். அவர் ஒரு நியாயமான தீர்வின் அடிப்படையில் என்று சொல்லிய போதும் 62 வீதமான சிங்கள மக்கள் வாக்களித்திருந்தார்கள். இருந்தாலும் சிங்களக் கட்சிகளைப் பொறுத்தமட்டில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்விற்குச் சென்றால் தங்கள் கட்சி தோற்றுவிடுமென்று அவர்கள் நம்புகின்றார்கள்.

அதனடிப்படையில்தான் ஐக்கிய தேசியக் கட்சியும் இப்படியாகச் செயற்படலாம். ஆனால் அவர்கள் என்ன சொல்லப் போகின்றனர்; உண்மை என்ன என்று எனக்குத் தெரியாது. ஆனால் இப்பிடிச் சொல்லியிருந்தால் அதனடிப்படையில் தான் நிச்சயமாகச் சொல்லப்பட்டிருக்கும் என்பதும் உண்மை.

**கேள்வி** - ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த கூற்று அல்லது நிலைப்பாட்டிற்குப் பின்னர் கூட்டமைப்பு எத்தகைய நடவடிக்கைகளை அடுத்த கட்டமாக முன்னெடுக்கவுள்ளது?

**பதில்** - ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த நிலைப்பாடு தொடர்பில் அவர்களிடம் கேட்க உள்ளோம். அவ்வாறு அவர்கள் எடுத்துள்ள இந்த நிலைப்பாட்டில் எவ்வளவு தூரம் உண்மையுள்ளது என்று பார்க்க வேண்டும். அதனால் சரியாக ஆராய்ந்து பார்த்த பின்னரே தான் எங்கள் முடிவுகள் அமையும்.

**கேள்வி** - ஒற்றையாட்சியின் அடிப்படையில் தான் தீர்வு என்றும் அதற்கு கூட்டமைப்பும் இணங்கியுள்ளதாகவே ஐக்கிய தேசியக் கட்சியினர் சொல்லி வருகின்றனர். அவ்வாறாயின் கூட்டமைப்பு அதற்கு உண்மையில் இணங்கியுள்ளதா. வரப் போகின்ற தீர்வு எதனை அடிப்படையாகக் கொண்டது?

**பதில்** - நான் அறிந்தவரையில் ஒருமித்த ஆட்சி என்ற அடிப்படையில் தான் தயாரிக்கப்பட்டதாக அறிகிறேன். ஆனால் அதில் எந்த மாற்றங்கள் ஏற்படுத்தப் படுமோ என்பது எனக்குத் தெரியாது. ஆகவே ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு மாறாகச் சொல்லுகின்ற நிலையில் இனி அதனடிப்படையில் தான் அவர்கள் கொண்டு வருவார்கள். அதற்கு கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகப் பெரும்பான்மையானவர்கள் அல்லது ஏறக்குறைய அனைவருமே அதனை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அதற்கு எதிராகத் தான் இருப்பார்கள்.

**கேள்வி** - ஏக்கிய ராஜ்ஜிய என்பது ஒருமித்த நாடு என்று சுமந்திரன் கூறியுள்ளார். அதே நேரம் ஏக்கிய ராஜ்ஜிய ஒற்றையாட்சி தான் என்று லக்ஸ்மன் கிரியெல்ல கூறியுள்ளார். இந்த குழப்பமான கருத்துக்கள் வெளிவரும் நிலையில் தீர்வை ஏற்படுத்தக் கூடிய சாத்தியங்கள் உள்ளனவா?

**பதில்** - என்னைப் பொறுத்தமட்டில் நான் இப்போது ஆரம்பம் முதலே இது மிகவும் கடினமான விசயம் என்று சொல்லிக் கொண்டே வருகின்றேன். இப்போது இருக்கும் சூழ்நிலையில் தீர்வுத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்றால் ஒரு வருடத்தில் இந்த அரசு தீர்வுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும். அது கொண்டு வரப்படாத இந்த நேரத்தில் இனிக் கொண்டு வருவதும் மிகக் கஷ்டமாகத் தான் இருக்குமென்றும் நான் நம்புகின்றேன்.

இந்த ஏக்கிய ராஜ்ஜிய என்ற பதம் ஒருமித்த நாடு என்று சொல்கிறதா அல்லதுஒற்றையாட்சி என்று சொல்லுகிறதா என்பது தெரியவில்லை. எனக்கு சிங்களம் மிகப் பெரிய அளவில் தெரியாது. ஆனாலும் தெரியுமோ தெரியாதோ அரசமைப்பில் எதனைச் சொல்லப் போகின்றார்கள் என்பது மிக முக்கியமான விசயம். அதற்கு என்ன விளக்கம் கொடுக்கப் போகின்றார்கள் என்பதும் முக்கியமானது.

இவைகள் எல்லாம் சொல்லப்பட்டு இன்றிருக்கின்ற சூழ் நிலையிலே நல்லதொரு தீர்வு வருமென்று நான் எதிர்பார்த்தால் என்னுடைய அரசியல் அறிவு பூச்சியமென்றே எதிர்பார்ப்பேன். ஏனென்றால் தென்னிலங்கையில் இன்று இருக்கக் கூடிய சூழ்நிலை அரசியல் குழப்பங்களால் ஒரு சரியான தீர்வை நோக்கி நாங்கள் பயணிக்க முடியும் என்று நான் நம்பவில்லை. - என்றார்.

*

காலைக்கதிர் Kalaikkathir



# மதிப்பிழந்த மைத்திரியை நீக்க ஜனாதிபதித் தேர்தல் அவசியம்

## குமார வெல்கம வலியுறுத்தல்



கொழும்பு, ஜன. 05

இலங்கை உயர்நீதிமன்றத்தினால் குற்றம் சுமத்தப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மக்களினாலும் சர்வ தேசத்தினாலும் மதிப்பிழந்த ஒருவராகவே பார்க்கப்படுகின்றமையால் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதே சிறந்ததென நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அண்மையில் நாட்டில் அரசியல் குழப்பத்தை உருவாக்கிய விடயத்தில் ஜனாதிபதி மைத்திரியையே அனைவரும் குறை கூறுகின்றனர்.

நாட்டின் அரசமைப்பை மீறியே தனது செயற்பாடுகள் அனைத்தையும் ஜனாதிபதி முன்னெடுத்தார். இதனால் அவர் மீது மக்களிடமும் சர்வதேசத்திடமும் எந்தவொரு மரியாதையும் இல்லாமல் போயுள்ளது.

ஆகையால் தற்போதைய சூழ்நிலையில் மாகாணசபை, நாடாளுமன்றம் ஆகிய தேர்தலை நடத்துவதைக் காட்டிலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி நாட்டின் சிறந்த தலைவரை நியமிக்க வேண்டியதே அவசியம்–என்றார். (ஐ)

# ரணில்தான் ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர்!

கொழும்பு, ஜன. 05

ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவே என்று அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா கூறியுள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் நாடாளுமன்றத்தில் அந்தக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் பொது மக்களின் எண்ணப்படி தெரிவு செய்யப்படுவார் என்றும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

எதிர்வரும் 14 மாதங்களில் பொருளாதாரத்தைப் பலப்படுத்தி, நிவாரணம் வழங்கும் வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதாகவும் அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# தண்டனையை ஏற்கத் தயார்

## நாமல் குமார அறிவிப்பு

கொழும்பு, ஜன. 05

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து தான் இராணுவத்தில் இணைந்ததாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்குத் தண்டனை வழங்கப்பட்டால் அதற்கு முகம் கொடுக்கத் தயார் என்று நாமல் குமார தெரிவித்தார்.



வரக்காபொலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துவெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாமல் குமார என்பவர் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து இராணுவத்தில் இணைந்து, பயிற்சியின்போது தப்பியோடியவர் என்று சி.ஐ.டியினர் நீதிமன்றத்தில் அறிவித்தனர்.

இது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து படைப்பிரிவுகளில் பயிற்சிப் பெற்றதாக நீதிமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் உண்மையானவை. அதற்காக வழங்கப்படும் தண்டனையை ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கின்றேன்.

அதேநேரம், நாட்டின் ஜனாதிபதியைக் கொலை செய்வதற்காக இடம்பெற்ற சூழ்ச்சியும் உண்மையானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வடக்கு வெள்ள பாதிப்புக்கு புத்தசாசன அமைச்சும் உதவி

கொழும்பு, ஜன. 05

வடக்கில் இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புத்தசாசன அமைச்சினூடாக நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளன.

புத்தசாசன அமைச்சின் அனுசரணையுடன் அகில இலங்கை புத்த சாசன பாதுகாப்புச் சபை இந்த நிவாரணத்திட்டத்தை முன்னெடுக்கின்றது.

இதன்படி நாடெங்கிலும் உள்ள பௌத்த வணக்கஸ்தலங்களினூடாக பொருள்கள் சேகரிக்கப்படவுள்ளன. இவற்றை மாவட்ட செயலகங்களிலோ மாவட்ட சாசன பாதுகாப்புச் சபைகளிலோ மக்கள் கையளிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி உலர் உணவுப்பொருள்கள், ஆடை அணிகலன்கள் போன்ற அத்தியாவசியப் பொருள்களைக் கையளிக்கமுடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வெள்ளத்தால் கிருமித் தொற்று முல்லைத்தீவில் சிறுமி மரணம்

முல்லைத்தீவு, ஜன. 05

முல்லைத்தீவில் வெள்ளத்தினால், உடலில் கிருமி தொற்று ஏற்பட்டு பாதிக்கப்பட்ட ஒன்பது வயதுச் சிறுமி ஒருவர் கடந்த புதன்கிழமை உயிரிழந்தார் என வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்திரகான் கௌஷியா என்ற 9 வயதுடைய சிறுமிக்குக் காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். பிரேத பரிசோதனையின் பின்னர் அவரது சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிறுமி உடலில் கிருமி தொற்று ஏற்பட்டமையால் இந்த மரணம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அடைமழையின் போது பாதுகாப்பான இடம் நோக்கிச் செல்லும்போது மழையில் நனைந்தே சென்றுள்ளார். இதன்போது அவரது உடலில் கிருமி தொற்றியிருக்கலாம் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# பிறந்து 28 நாள்களான சிசுவை உயிருடன் புதைத்துக் கொலை செய்த கொடூரத் தாய்!

கொழும்பு, ஜன. 05

பிறந்து 28 நாள்களான சிசுவுக்குத் தொண்டைப் பகுதியில் பால் இறுகியதாகக்கூறி அந்தச் சிசுவை உயிருடன் புதைத்துக் கொலை செய்த தாய் மற்றும் தாயின் தாய் ஆகிய இருவரைச் சந்தேகத்தின் பெயரில் ஹற்றன் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஹற்றன், கொட்டகலை பில்ட் தோட்டப் பகுதியில் நேற்று முன் தினம் முற்பகல் 11.30 மணி அளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது எனக் ஹற்றன் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சிசு காணாமல்போன சம்பவம் தொடர்பில் பிரதேச மக்களால் ஹற்றன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து ஹற்றன் பொலிஸார் அந்தச் சிசு புதைக்கப்பட்ட இடத்தை இனங்கண்டனர்.

கணவருக்கும் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட குடும்பப் பிரச்சினை காரணமாக அந்தச் சிசுவை உயிருடன் அவர்கள் புதைத்துள்ளனர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

திவ்யநாதன் வெண்ணிலா என்ற சிசுவே சடலமாக மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர். சிசுவின் சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சிசுவின் தந்தை கண்டியில் தொழில் செய்து வருகின்றார் எனவும், அவர் வீட்டில் இல்லாத சந்தர்ப்பத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களான இரு பெண்களையும் ஹற்றன் நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கையை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருவதோடு சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வெலிகமக் கடற்பரப்பில் நீராடச் சென்றவர் மாயம்

கொழும்பு, ஜன. 05

மாத்தறை வெலிகம–கப்பரந்தொட்ட கடற்பரப்பில் நீராடச் சென்ற வெளிநாட்டவர் ஒருவர் காணாமற் போயுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த நபர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை தனது மூன்று நண்பர்களுடன் நீராடச் சென்றபோதே காணாமற் போயுள்ளார்.



காணாமற்போயுள்ள அந்த நபர் 23 வயதுடைய நோர்வே நாட்டைச் சேர்ந்த இளைஞரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவரைத் தேடும் பணியில் மிரிஸ்ஸ கடற்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# புதிய அமைச்சரவை தொடர்பான வர்த்தமானியில் திருத்தம் வருகிறது

கொழும்பு, ஜன. 05

புதிய அமைச்சரவையின் விடயதானங்களை உள்ளடக்கி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் திருத்தங்களை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசின் சிரேஷ்ட அமைச்சர்களுக்கிடையில் பல சந்தர்ப்பங்களில் முன்னெடுக் கப்பட்ட கலந்துரையாடலின் பிரதிபலனாக அமைச்சர்களின் விடயதானங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருத்தம் செய்யப்படவுள்ள வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் பகிரப்பட்டுள்ள பல விடயதானங்களை ஏனைய அமைச்சர்களின் கீழ் கொண்டுவரவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கண்டி அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு அரசவங்கி மற்றும் அரசபெருந்தோட்டங்களை நிரந்தரமாக ஒதுக்குவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் நிதி மற்றும் ஊடக அமைச்சின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள நிறுவனங்கள் பலவற்றைப் பிரதான அமைச்சரொருவரின் விடயதானங்களின் கீழ் கொண்டு வருவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ஐ)




# இலங்கைக்கு எதிரான ரி–20: நியூசிலாந்து அணி அறிவிப்பு

நியூசிலாந்து கிரிக்கெட் அணி, தற்போது சொந்த மண்ணில் இலங்கை அணியுடன் ஒருநாள் தொடரில் விளையாடி வருகின்றது.

இதனையடுத்து, இலங்கை அணியுடன் ஒரேயொரு ரி–20 போட்டியில் நியூசிலாந்து அணி விளையாடவுள்ளது.

இதற்கிடையில், இப்போட்டிக்கான 13பேர் கொண்ட நியூசிலாந்து அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அணித்தலைவர் கேன் வில்லியம்சனுக்கு ஓய்வளிக்கப்பட்டு, டிம் சவுத்தீ அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு, நீண்ட நாட்களாக உபாதைக் காரணமாக விளையாடாமல் இருந்த பந்து வீச்சு சகலதுறை வீரர் மிட்செல் சான்ட்னர் அணியில் இடம்பிடித்துள்ளார்.

மற்றொரு பந்துவீச்சு சகலதுறை வீரரான ஸ்கொட் குகேலின் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். கடந்த ஜனவரி மாதத்திற்கு பிறகு ஜிம்மி நீஸம் அணியில் தற்போது சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

டிம் சவுத்தீ தலைமையிலான நியூசிலாந்து அணியில், லொக்கி பெர்குசன், மார்டின் கப்டில், ஸ்கொட் குகேலின், கொலின் மன்ரோ, ஜிம்மி நீஸம், ஹென்ரி நிக்கோல்ஸ், கிளென் பிலிப்ஸ், செத் ரென்ஸ், மிட்செல் சான்ட்னர், டிம் செய்பார்ட், இஷ் சொதி, ரோஸ் டெய்லர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையிலான ஒரேயொரு ரி–20 போட்டி, எதிர்வரும் 11ஆம் திகதி ஒக்லாந்தில் நடைபெறவுள்ளது.

(ஐ)

# ஆஸி அணியில் மாற்றம்

இந்தியா அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் விளையாடும் ஆஸ்திரேலியா அணி வீரர்களின் விவரங்களை, கிரிக்கெட் ஆஸ்திரேலியா அறிவித்துள்ளது.

ஆரோன் பின்ஞ் தலைமையிலான ஆஸ்திரேலியா அணியில், பீட்டர் சிடில், நாதன் லியோன், உஸ்மான் கவாஜா ஆகியோர் மீண்டும் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கிறிஸ் லின், டீ ஆர்சி ஷோர்ட், பென் மெக்டோர்மோட், ட்ராவிஸ் ஹெட், அஷ்டன் அகர் ஆகியோருக்கு அணியில் இடம் கிடைக்கவில்லை.

எனினும், இந்திய அணிக்கெதிரான தொடரில் மீண்டும் எதிர்பார்க்கப்பட்ட நாதன் குல்டர் நெய்ல், இன்னமும் காயம் குணமடையாததால் அணியில் இடம்பெறவில்லை.

முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களான மிட்செல் ஸ்டாக், ஜோஸ் ஹசில்வுட், பெட் கம்மின்ஸ் ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு பதிலாக வேகப்பந்து வீச்சாளர்களான ஜெய் ரிச்சர்ட்சன், ஜேசன் பெஹ்ரண்டோர்ப் ஆகியோருக்கு அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஆரோன் பின்ஞ் தலைமையிலான ஆஸ்திரேலியா அணியில், உஸ்மான் கவாஜா, ஷோன் மார்ஷ், பீட்டர் ஹேண்ட்ஸ்கொம்ப், கிளென் மேக்ஸ்வெல், மார்க்கஸ் ஸ்டொயினிஸ், மிட்செல் மார்ஷ், அலெக்ஸ் கெர்ரி, ஜெய் ரிச்சட்சன், பில்லி ஸ்டேன்லேக், ஜேசன்



பெஹ்ரண்டோர்ஃப், பீட்டர் சிடில், நாதன் லியோன். எடம் செம்பா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின், முதல் ஒருநாள் போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி சிட்னி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# செல்ல மகளின் படத்தை வெளியிட்டார் ரோஹித்



இந்திய கிரிக்கெட் வீரர் ரோஹித் சர்மா, தனது செல்ல மகளின் முதல் புகைப்படத்தை டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

2018ஆம் ஆண்டின் இறுதி நாள் கிரிக்கெட் வீரர் ரோஹித் சர்மாவுக்கு மகிழ்ச்சியானதாகவே அமைந்தது. தனக்கு பெண் குழந்தை பிறந்ததே அவரின் மகிழ்ச்சிக்குக் காரணம்.

ரோஹித் சர்மா, ரித்திகா என்பவரைக் காதலித்து கடந்த 2015 ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார். கிரிக்கெட் போட்டி நடக்கும் இடங்களுக்குஎப்போதும் மனைவியை அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் ரோஹித். இவர்களின் ரொமான்ஸ் இந்திய கிரிக்கெட் அணியில் பிரபலமான ஒன்றும் கூட.

இந்நிலையில் கர்ப்பமாக இருந்த ரித்திகா டிசெம்பர் 30 ஆம் திகதி மும்பையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார்.

தான் அப்பா ஆனதை அடுத்து ஆஸ்திரேலியா தொடரில் விளையாடிக்கொண்டிருந்த ரோஹித், மும்பைக்கு விரைந்தார்.

ரோஹித் அப்பா ஆனதை அடுத்து அவரது ரசிகர்கள் பலரும் தங்கள் மகிழ்ச்சியை டுவிட்டர் பக்கத்தில் வெளிப்படுத்தி வந்தனர்.

இந்நிலையில் ''உலகுக்கு ஹலோ...2019 சிறப்பாக அமையும்'' என பதிவிட்டு தன்னுடைய மகளின் புகைப்படத்தை ரோஹித் டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் புகைப்படத்தில் குழந்தையின் முகம் தெரியாவிட்டாலும், குழந்தையின் பிஞ்சுவிரல்கள் தனது பெற்றோரின் விரல்களை அழகாக பற்றியிருக்கிறது. அந்தப் புகைப்படத்தை இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் பலரும் ஷேர் செய்து வருகின்றனர்.

# தனி ஆளாக போராடினார் குசல் பெரேரா ஆயினும் இலங்கை அணிக்குத் தோல்வி




நியூசிலாந்துக்கு எதிராக பே ஓவல் மைதானத்தில் நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில், இலங்கை அணி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இலங்கை–நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் ஆட்டம், பே ஓவல் மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. அதன்படி தொடக்க வீரர்களாக மார்டின் கப்டில், மூன்றோ ஆகியோர் களமிறங்கினர். மூன்றோ 13 ஓட்டங்களில் மலிங்கா பந்துவீச்சில் அவுட் ஆனார்.

அதன் பின்னர் வந்த கப்டன் வில்லியம்சன், தொடக்க வீரர் கப்டிலுடன் சேர்ந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவர்களின் பார்ட்னர்ஷிப் மூலம் நியூசிலாந்தின் ஸ்கோர் கணிசமாக உயர்ந்தது. அரைசதம் அடித்த வில்லியம்சன் 76 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் வந்த ரோஸ் டெய்லர் அதிரடியில் இறங்கினார். இதன்மூலம் ஜெட் வேகத்தில் அணியின் ஸ்கோர் உயர்ந்தது.

கப்டில் சிக்சரும், பவுண்டரிகளுமாக விளாசினார். தொடர்ந்து அதிரடி காட்டிய அவர் சதமடித்தார். 139 பந்துகளில் 5 சிக்சர், 11 பவுண்டரிகளுடன் கப்டில் 138 ஓட்டங்கள் எடுத்தார்.

பின்னர் டெய்லர் 37 பந்துகளில் 2 சிக்சர், 6 பவுண்டரிகளுடன் 54 ஓட்டங்கள் விளாசி அவுட் ஆனார். கடைசி கட்டத்தில் அதிரடி காட்டிய நீம் 13 பந்துகளில் 6 சிக்சருடன் 47 ஓட்டங்கள் விளாசினார்.

இதன்மூலம் நியூசிலாந்து அணி 7 விக்கெட் இழப்புக்கு 371 ஓட்டங்கள் குவித்தது. இலங்கை அணி தரப்பில் மலிங்க, பிரதீப் மற்றும் திசாரா பெரேரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இமாலய இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி தொடக்கத்தில் இருந்தே அதிரடியில் இறங்கியது. டிக்வெல்ல நியூசிலாந்தின் பந்துவீச்சை அடித்து நொறுக்கினார். மற்றொரு தொடக்க வீரர் குணதிலக 62 பந்துகளில் 43 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

பின்னர் வந்த குசல் பெரேராவும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்நிலையில் அரைசதம் கடந்த டிக்வெல்ல 50 பந்துகளில் 3 சிக்சர், 8 பவுண்டரிகளுடன் 76 ஓட்டங்கள் குவித்து அவுட் ஆனார்.

அதன் பின்னர் இலங்கை அணியின் விக்கெட்டுகள் சரியத் தொடங்கியன.

குசல் மெண்டிஸ்(18), சந்திமால்(10) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும், குசல் பெரேரா நங்கூரம் போல் நிலைத்து நின்று ஆடினார்.

அணியின் ஓட்டம் 298 ஆக இருந்தபோது, சதம் விளாசிய பெரேரா 102 ஓட்டங்களில் அவுட் ஆனார். இதில் ஒரு சிக்சர் மற்றும் 13 பவுண்டரிகள் அடங்கும்.

பின்னர் வந்த வீரர்களும் சொற்ப ஓட்டங்களில் வெளியேற, இலங்கை அணி 49 ஓவர்களில் 326 ஓட்டங்களுக்கு ஆல்–அவுட் ஆனது.

இதன்மூலம் நியூசிலாந்து அணி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அந்த தரப்பில் நீம் 3 விக்கெட்டுகளையும், பெர்குசன், போல்ட் மற்றும் சோதி தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

## ஆயுத.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் நேற்று அவரது இல்லத்தில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை அவைத் தலைவர் நடத்தினார்.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது ஜனநாயக வழியில் நின்றவர்களுக்கும், புலிகளுக்கும் இடையில் செய்யப்பட்ட 'டீல்' ஊடாகவே. அதற்கு முன்னர் ஜனநாயக வழியில் செயற்பட்டவர்களைப் புலிகள் படுகொலை செய்தார்கள் என அண்மையில் கூறியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக நீண்ட காலம் ஜனநாயக அரசியலில் ஈடுபட்டவர் என்ற அடிப்படையில் தங்கள் கருத்து என்ன என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

யாழ்ப்பாணம் சுதுமலைப் பகுதியில் 1991ஆம் ஆண்டு நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றுக்கு நான் உட்பட சிலர் சென்றிருந்தோம். அப்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கூறிய விடயம் 'தொடர்ந்தும் நாங்கள் போராடிகொண்டிருக்க முடியாது. எனவே ஜனநாயக ரீதியான வழிமுறைகளையும் நாங்கள் கையில் எடுக்க வேண்டும்' என்றார்.

என்னைப் பிரேமதாஸவிடம் அனுப்பியது முதற்கொண்டு அனைத்தையும் அவர் வழிநடத்தினார். மேலும் நாடாளுமன்ற அரசியலிலும் தாங்கள் ஈடுபட வேண்டிய தேவை இருக்கின்றது என்பதையும் அவர்கள் அப்போதே ஏற்றுக் கொண்டார்கள். ஆக மொத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஜனநாயகத்தை விரும்பவில்லை என்பது தவறான கருத்தாகவே அமையும்.

அவர்கள் ஜனநாயகத்தை விரும்பினார்கள். ஆயுதப் போராட்டத்தை மட்டுமே அவர்கள் நம்பியிருக்கவில்லை. இந்தச் சம்பவங்கள் நடந்து நீண்ட நாள்கள் அல்லது நீண்ட காலம் ஆவதால் சில உண்மைகள் மறைக்கப்பட்டிருக்கலாம் அல்லது தெரியாமல் இருக்கலாம். ஆனால் உண்மையில் புலிகளிடம் ஜனநாயகத்தின் மீதான பற்றுதல் எப்போதும் இருந்தது.

அதனாலேயே கிராமங்கள் தோறும் அமைப்புக்கள், குழுக்களை அவர்கள் உருவாக்கினார்கள். ஆகவே இன்று அரசியலில் இருப்பவர்கள் அல்லது இன்று தமிழரசுக் கட்சியில் இருப்பவர்கள் அந்தக் காலங்களில் இருந்தவர்கள் அல்லர். அந்தச் சம்பவங்களுக்கும் இன்றுள்ளவர்களுக்கும் நிறைய இடைவெளிகள் இருக்கின்றன.

மேலும் தமிழரசுக் கட்சியில் இருப்பவர்கள் அனைவரும் புலிகளுக்கு ஆதரவானவர்களும் அல்லர். ஆகவே உண்மையை சொல்லவேண்டிய நிலை உருவானால் உண்மையைச் சொல்ல வேண்டும். காரணம் நான் அதற்குள் வாழ்ந்தவன். என்னை யாரும் சவாலுக்குட்படுத்த முடியாது. அதேசமயம் கொலைகள் நடந்தன. குறிப்பாக அமிர்தலிங்கம் சுடப்பட்டார், ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். அப்போதெல்லாம் நீங்கள் செய்தது தவறு என்பதைப் புலிகளுக்கே சொன்னவன் நான்.

ஆனால் அந்தக் கொலைகளுக்குப் பின்னால் உள்ள காரணத்தை புலிகள்தான் கூறவேண்டும். அதை நான் கூறமுடியாது. எனக்கு அது தெரியாது. அந்த வகையில் சில தவறுகள் நடந்திருக்கின்றன. ஆனால் மக்கள் அன்னப்பட்சி போல் யார் சரியானவர்கள், யார் பிழையானவர்கள் என்பதை அறிந்து கொள்வார்கள். அறிந்து கொள்ளவேண்டும். மேலும் சிலரை குறைகூற முடியாது. காரணம் அவர்கள் இப்போது தான் அரசியலுக்கு வந்தவர்கள் – என்றார். (ஐ-07)

## எதிர்க்கட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மஹிந்த ராஜபக்ஷவே செயற்படுவார் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கான கூட்டம் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் நேற்று முற்பகல் சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது 8 ஆம் திகதிக்குரிய சபை நடவடிக்கைகள் சம்பந்தமாக விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

அதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் தனது நிலைப்பாட்டைச் சபாநாயகர் அறிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கூட்டரசிலிருந்து விலகியுள்ளதால் அதில் பெயரிடப்படும் நபருக்கே எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படவேண்டும். அந்த வகையில் மஹிந்த ராஜபக்ஷவின் பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது. அது ஏற்றுக்கொள்ளப்படும். அத்துடன், எதிர்க்கட்சிப் பிரதம கொறடாவாக மஹிந்த அமரவீர செயற்படுவார். என்று குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி சபாநாயகர் அறிவிப்பு வேளையில் இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளார்.

'சூழ்ச்சி அரசு' கவிழ்க்கப்பட்ட பின்னர் மஹிந்தவை எதிர்க்கட்சித் தலைவராகச் சபாநாயகர் நியமித்தார். எனினும், ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன சபாநாயகரின் முடிவை ஆட்சேபித்திருந்தன.

இந்நிலையிலேயே மஹிந்தவுக்கான பதவியைச் சபாநாயகர் உறுதிப்படுத்தியுள்ளார். இதனால், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம், இல்லம் ஆகியவற்றிலிருந்து சம்பந்தன் வெளியேறவேண்டியுள்ளது. (ஐ)

## எம்.பியாகிறார்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தேசியப்பட்டியல் எம்.பியாக நியமிக்கப்படவுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் பதவியைப் பெறுவதற்காக எம்.பி.பதவியை ஹில்புல்லாஹ் நேற்று இராஜினாமா செய்தார்.

இதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே சாந்த பண்டார நியமிக்கப்படவுள்ளார். எதிர்வரும் 8 ஆம் திகதி அவர் சத்தியப்பிரமாணம் ஏற்பார் எனத் தெரியவருகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் குருணாகலை மாவட்ட எம்.பியாக இருந்த சாந்த பண்டார கடந்த பொதுத்தேர்தலில் தோல்வியடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கிழக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இதன்படி மேல் மாகாண ஆளுநராக அஸாத் சாலியும், கிழக்கு மாகாண ஆளுநராக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆளுநர் பதவியைப் பெறுவதற்காக ஹில்புல்லா எம்.பி. பதவியைத் துறந்துள்ளார்.

அத்துடன், வடமத்திய மாகாண ஆளுநராக சரத் ஏக்கநாயக்கவும், மத்திய மாகாண ஆளுநராக மைத்திரி குணரத்னவும், வடமேல் மாகாண ஆளுநராக பேல ஜயரத்னவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைக் கடுமையாக விமர்சித்துவரும் மைத்திரி குணரட்னவுக்கும் பதவி வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## அரசியல்வாதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இராணுவம் வெளியேற்றப்படவேண்டும் எனத் தொடர்ச்சியாக தாங்கள் கூறிவரும் நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பயந்து ஒளிந்திருந்தவர்கள் இப்போது இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் எனக் கூறுவதாக இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க கூறுகிறார். இது குறித்து உங்களுடைய கருத்து என்ன? என்பது தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே விக்கினேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மகேஷ் சேனநாயக்கா எனது நண்பர். தொடக்கத்தில் வந்தபோது இராணுவம் பற்றிய உள்நாட்டு வெளிநாட்டு மக்களின் கருத்து மிகமோசமாக அமைந்துள்ளது என்றும் அதனை மாற்றத் தான் நடவடிக்கைகள் எடுக்கப்போவதாகவும் அவரே என்னிடம் கூறினார். அவ்வாறே அவர் செய்தார். கீரிமலைக்குப் போகும் வழியில் நல்லிணக்கபுரத்தைக் கட்டிக்கொடுத்தார். அரசுக்கு அவர் செய்யவேண்டிய கடமைகளை அவர் கச்சிதமாகச் செய்து கொண்டு போகின்றார்.

ஆனால் அவர் அரசியல்வாதிகள் போல் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். அவர் அரசின் ஒரு அலுவலர். அரசு கூறுவனவற்றை செய்யவேண்டிய கடப்பாடு உடையவர். 'பயந்து ஒளிந்தவர்கள்' என்று என்னைத் தான் குறிப்பிட்டிருந்தால் நான் 1987 இல் இருந்து தொடர்ச்சியாக தெற்கிலேயே இருந்தவன்.

1983 இல் மல்லாகத்தில் இராணுவம் செய்த அட்டாசங்களால் ஏற்பட்ட மரணங்கள் பற்றிய மரண விசாரணைகளை வேறொவரும் செய்ய முன்வராத நிலையில் நானே செய்தவன். ஆகவே பயந்து ஒளிய வேண்டிய காரணங்கள் எவையும் எமக்கிருக்கவில்லை. மக்கள் பயந்து ஒளிந்தது இராணுவத்திற்கே. 1960 களில் வந்த இராணுவத்தின் நிமித்தம் மக்கள் பயந்தனர். பொலிஸ் இன்ஸ்பெக்டர் பஸ்தியம்பிள்ளை காரணமாக இளைஞர், யுவதிகள் பயந்தொளிந்தனர்.

போரின் போது கண்மூடித்தனமாய் விடுத்த குண்டுவீச்சுக்களால் மக்கள் ஓடி ஒளிந்தனர். திடீரென்று வந்து மக்கள பிமான வேலைகளைச் செய்வதால் இராணுவம் முற்றிலும் மாறிவிட்டது என்று அர்த்தமுமில்லை, இராணுவம் பிழையேதும் எத்தருணத்திலும் செய்யவில்லை என்றும் அர்த்தமில்லை.

இராணுவந் தான் பொம்மைகளையும் பொருட்களையுந் தந்து இங்கு தரித்து நிற்கப் பார்க்கின்றார்கள். பொய்யாக வழக்குகளைப் புனைந்து புலிகள் வந்துவிட்டார்கள என்று பூச்சாண்டி காட்டி இங்கு தரித்து நிற்கப் பார்க்கின்றார்கள். வெள்ளத்தின் போது மக்களுக்கு உதவி செய்தார்கள் என்றால் அது அவர்கள் கடமை. அதையும் செய்யாது விட்டால் வரும் மார்ச் மாதத்தில் ஜெனிவாவில் போய் அரசாங்கம் எதைக் கூறப் போகின்றார்கள்?–என்றார். (ஐ-07)

## இடரால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 490 குடும்பங்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கினார்.

மக்களின் வீட்டுப் பாவனைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள், மெத்தை நுளம்புவலை, விளக்குமாறு, தும்புத்தடி, மெ ாப்பர், தண்ணீர்க்கான், பாய், தலையணை, போர்வை, துவாய் உள்ளிட்ட சிறுவர்களுக்குத் தேவையான பொருட்களும் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான கொப்பிகள், புத்தகப்பை உள்ளிட்ட பத்து இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை 200 குடும்பத்தலைவிகளைக் கொண்டவர்களுக்கும், 250 பாடசாலை மாணவர்களுக்கும், 40 சிறுவர்களுக்கும் வழங்கப்பட்டன (ஐ)

## முல்லையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) காணாமல்போயுள்ளன என மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த மாதம் இடம்பெற்ற வெள்ள இடர் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஏற்பட்ட மொத்த இழப்பீடுகள் தொடர்பில் மாவட்ட அரச அதிபர் கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள இடர் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 10,118. 32,551 அங்கத்த வர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வெள்ள நீர் காரணமாக மக்களின் வாழ்வாதாரங்கள், உட்கட்டுமானங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

20146.5 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை பகுதியாகவும் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. நிலக்கடலை 3849 ஏக்கர் சேதமடைந்துள்ளது. உழுந்து, பயறு போன்றனவும் முழுமையாகச் சேதடைந்துள்ளன. மரக்கறிப் பயிர்ச்செய்கை 498 ஏக்கர் சேதமடைந்துள்ளன.

கால்நடைகளும் உயிரிழந்துள்ளன. 3012 மாடுகள், 418 எருமை மாடுகள், 912 ஆடுகள், 6895 ஆடுகள், கோழிகள் முழு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## நாமல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஊழல் எதிர்ப்புப் படையணியின் செயற்பாட்டு பணிப்பாளர் நாமல் குமார ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுவதற்குக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து நீதிமன்றம் இந்த உத்தரவை நேற்று விடுத்துள்ளது. (ஐ)

## ஐரோப்பிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மன்ற உறுப்பினர்கள் அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக நேரில் ஆராய்ந்தனர்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களான வில்லியம் டார்ட்மவுத் மற்றும் ஜெப்ரி வான் ஓர்டன் ஆகியோர் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் வவுனியா மாவட்ட செயலகத்துக்குச் சென்று மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய்ந்தனர்.

இதன்போது வவுனியா மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதில் அவர்கள் மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகக் கேட்டறிந்தனர்.

இந்தக் கலந்துரையாடலை முடித்துக்கொண்டு மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட சிதம்பரநகர் பகுதிக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்ட அவர்கள் அக்குள்ள மக்களைச் சந்தித்து நிலைமைகளை ஆராய்ந்தனர். (ஐ-100)

## நீதிமன்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரள முல்லைத்தீவு பகுதியில் அமைக்கப்பட்டுவரும் நீதிமன்ற கட்டடத் தொகுதியைப் பார்வையிட்டார்.

அங்கு நடைபெறும் வேலைத் திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் கேட்டறிந்தார்.

பின்னர் அவர் மாங்குளம் பகுதிக்குச் சென்று அங்கு அமைக்கப்பட்டுவரும் நீதிமன்ற கட்டடத் தொகுதியையும் பார்வையிட்டார். (ஐ)

## வடக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட அரச பஸ் சேவைகளில் பெரும் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள், அரச பணியாளர்கள் மற்றும் பருவகாலச் சீட்டைப் பயன்படுத்திப் பயணங்களை மேற்கொள்பவர்கள் அரச பஸ் சேவை புறக்கணிப்பால் பெரிதும் பாதிப்புக்களை எதிர்கொண்டனர்.

நிர்வாகத்திறமையற்ற வடபிராந்திய முகாமையாளரால் வடபிராந்திய சாலைகள் இழுத்து மூடப்பட வேண்டிய கட்டாயத்தில் இயங்கி வருகின்றன.

ஏற்கனவே எழுத்து மூலம் உயர்பீடங்களுக்கு அறிவித்த குற்றச்சாட்டுகளுக்கு உரிய தீர்வு கிடைக்கப்பெறாத காரணத்தால் வடபிராந்திய தொழிலாளர்கள் மிகுந்த அச்சத்துடனும் கவலையுடனும் பணியாற்றி வருகின்றோம்.

இதுவரை பொதுமக்களின் சேவைகள் பாதிக்கப்படாத வகையில் இரண்டு போராட்டங்களை வடபிராந்திய முகாமையாளருக்கு எதிராக மேற்கொண்டிருந்தோம். இன்று வரை தீர்வுகள் கிடைக்கப் பெறவில்லை.

இதனால் வேறு வழியின்றி வடபிராந்தியத் தொழிலாளர்களாகிய எமது நன்மை கருதி வடபிராந்திய முகாமையாளரை வடக்கிலிருந்து வெளியேற்றுமாறு தெரிவித்து இன்று தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோம் என்று இ.போ.ச.ஊழியர்கள் தெரிவித்தனர்.

இ.போ.ச. புறக்கணிப்பை அடுத்து அங்கு குழப்பங்கள் ஏற்படாமல் தடுப்பதற்காக அனைத்து பஸ் சாலைகளிலும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது (ஐ-07)

## மக்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

வவுனியா, செட்டிகுளம், ஆண்டியா புளியங்குளம் பள்ளிவாசல் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

மதவாச்சி–மன்னார் வீதியில் ஆண்டியாபுளியங்குளத்தில் மதிய நேர தொழுகையின் பின்னர் பிற்பகல் 1 மணிக்கு ஒன்றுகூடிய இஸ்லாமிய மக்கள் தமது பூர்வீகக் காணிகளை இராணுவத்தினர் விடுவிக்கவேண்டும் எனக் கோஷங்களை எழுப்பியதுடன் பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

இதன்போது 'எங்கள் மூதாதையரின் காணியில் இராணுவம் விவசாயம் செய்கின்றது உடன் விடுவிக்கவேண்டும்', 'டிசெம்பர் 31இற்கு முன் மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என தெரிவித்த ஜனாதிபதியின் சொல் பொய்', அரசே எமது விவசாய நிலங்களை விட்டுவிடு, விவசாய நிலங்களையும் மேச்சல் நிலங்களையும் விட்டு வெளியேறு போன்று வாசகங்கள் எழுதிய பதாதைகளையும் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது ஆர்ப்பாட்ட இடத்திற்கு வருகை தந்த செட்டிகுளம் பிரதேச செயலாளர் க.சிவகனனிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மகஜரொன்றையும் கையளித்தனர்.

இராணுவத்தினர் தமது காணியில் விவசாயப் பண்ணை நடத்தி வருவதாகவும், அங்கு விளையும் பொருட்களைத் தமக்கே கடை அமைத்து விற்பனை செய்து வருவதாகவும் சுட்டிக்காட்டினர்.

சுமார் 2 மணி நேரமாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின் அவர்கள் கலைந்து சென்றனர். (ஐ-100)

# இரணைமடுக் குடிதண்ணீர் விடயத்தில் போதிய உடன்பாடின்மையால் இழுபறி

## மீளாய்வுக் கூட்டத்தில் அமைச்சர் ஹக்கீம்



கொழும்பு, ஜன. 05

இரணைமடு நீர்த்தேக்கத்தை சூழவுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகள் குழாய் வழியான குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை எதிர்ப்பதன் பின்னணியில் அரசியல்வாதிகள் சிலருக்கிடையிலான போதிய உடனபாடின்மை இழுபறி நிலையை ஏற்படுத்தியுள்ளதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தற்போது நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள நீர் விநியோகத் திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது, அதற்குத் தலைமை தாங்கிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இதனைக் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் லக்கி ஜயவர்தன, செயலாளர் பிரியந்த மாயாதுன்ன, அமைச்சின் உயர் அதிகாரிகள் பல்வேறு பிரதேசங்களுக்கும் பொறுப்பான தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர்கள், உதவிப் பொது முகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். நாடெங்கிலும் முன்னெடுக்கப்படும் 20 பாரிய குழாய் நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்புச் செயற்றிட்டங்கள் என்பன பற்றி இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவிக்கையில் -

அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடரின் பாதிப்புகளை நேரில் கண்டறிவதற்காக நாங்கள் கிளிநொச்சி மாவட்டத்திற்குச் சென்றிருந்தபோது இரணைமடு நீர்த்தேக்கத்தை நேரில் பார்வையிட்டேன். இப்பாரிய நீர்தேக்கத்திலிருந்து பெறப்படும் நீரின் மூலம், அப்பிரதேச விவசாயிகளுக்குப் பாதிப்பற்ற விதத்தில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு மட்டுமல்லாது, யாழ் குடாநாட்டின் குடிதண்ணீர்த் தேவையையும் நிவர்த்தி செய்ய முடியும்.

இராஜாங்கனை நீர்த்தேக்கம் போன்றவை அமைந்துள்ள பிரதேங்களில் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்பு இன்மையினாலேயே நிலைமை சிக்கலடைந்துள்ளதாக தெரிவிக்கப்படும் அதேவேளை, இரணைமடு நீர்த்தேக்கத்தை சூழவுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தை விவசாயிகள் எதிர்ப்பதன் பின்னணியில் அரசியல்வாதிகளுக்கிடையிலான முரண்பாடுகள் இழுபறி நிலை ஏற்படுத்தியுள்ளது.

இரணைமடு நீர்த்தேக்கத்துக்குப் பதிலாக, வேறு நீர்த்தேக்கங்களிலிருந்து நீரைப் பெறுவது பற்றியும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. எவ்வாறாயினும், இரணைமடு நீர்த்தேக்கத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் நீர் விநியோகத் திட்டத்தை கைவிட்டுவிட முடியாது. விவசாயிகள்மற்றும் பொதுமக்கள் மத்தியில் இது பற்றிய தெளிவை ஏற்படுத்துவதோடு, அரசியல் ரீதியாகவும் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும்.

சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்கும் யாழ். குடாநாடு, கற்பிட்டி ஆகிய பிரதேசங்களுக்கு கடல் நீரைச் சுத்திகரித்து தூய குடித்ண்ணீராக வழங்கும் செயல்திட்டத்தைப் பற்றிக் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறோம். அம்பாறை மாவட்டதில் பொத்துவில் பிரதேசத்திற்கும் கடல் நீரை சுத்திகரித்து குடிதண்ணீராக வழங்குவது பற்றி ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் பொத்துவிலை பொறுத்தவரையில் ஹெட ஓயா திட்டத்தின் மூலம் நீரை பெற்றுக்கொள்வதே உகந்ததாகும் - என்றார்.

மீளாய்வு கூட்டத்தில் வடமாகாணத்துக்கு பொறுப்பான நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிரதிப்பொது முகாமையாளர் பாரதிதாசன் விளக்கமளித்தார். கிளிநொச்சி மற்றும் யாழ் மாவட்ட மக்களின் குடிதண்ணீர்த் தேவையை நிவர்த்திக்கக்கூடிய மாற்றுத் தீர்வுகளையும் அவர் முன்வைத்தார். குழாய் வழியாக நீரை வழங்குவதற்கு, இயந்திர பயன்பாட்டுக்குச் செலவு கூடிய நீர் மின்சாரத்திற்குப் பதிலாக சூரிய சக்தியைக்கொண்டு பெறப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்த முடியும் என்று நம்பிக்கை தெரிவித்தார். இதன்போது முன்னர் அங்கு பணியாற்றிய பிரதி பொதுமுகாமையாளர் உமர் லெப்பையும் கருத்து தெரிவித்தார்.

அமைச்சர் ஹக்கீம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொறுப்பான மேலதிகாரிகளிடம் தனித்தனியாக விளக்கங்களைக் கோரினார். எஞ்சிய காலப்பகுதிக்குள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு, முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களை துரிதப்படுத்தி நிறைவு செய்ய வேண்டும் எனவும் அவர் பணிப்புரை விடுத்தார்.

(ஐ)




# நான் விலகியதனால்தான் தயாசிறிக்கு செயலர் பதவி

## கூறுகிறார் லக்ஷ்மன் தாஸ



சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நான் விலகுவதாக அறிவித்ததாலேயே தயாசிறி ஜயசேகரவை ஜனாதிபதி கட்சியின் பொதுச்செயலாளராக நியமித்தார். இந்த நியமனத்தில் வேறு எந்த மறைமுக விடயங்களும் இல்லை எனப் பேராசியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக தயாசிறி ஜயசேகர நியமிக்கப்பட்டமை தொடர்பில் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கட்சி உறுப்பினர்களானாலும், தொகுதி அமைப்பாளர்களானாலும் யாராக இருந்தாலும் கட்சியை விமர்சிப்பதற்கும் குறைகளை சுட்டிக்காட்டுவதற்கும் உரிமை உள்ளது. அவை தொடர்பில் ஆராய்ந்து பார்க்கவேண்டிய பொறுப்பு எமக்குக் காணப்படுகின்றது. எனவே இவை தொடர்பிலும் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார் - என்றார்.

(ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.